
# மன்னனுள் ஒரு மனிதன்

பேராசிரியர் ஏ. வீ. சுரவீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்,
விசேட சேர்க்கைப் பகுதி

# மன்னனுள் ஒரு மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனுள் ஒரு மனிதன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

பேராசிரியர் ஏ. வீ. சுரவீர

தமிழாக்கம் :-
ஏ.ஸீ.எம். ராஸீக்
ஸமீனா ஸஹீட்

எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ.டி.எஸ். குலரத்ன வீதி
கொழும்பு – 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1ஆம் பதிப்பு | : | 1984<br>(பவதிமிர கதைத்<br>தொகுப்பின் ஒரு கதை) |
| 2ஆம் பதிப்பு | : | 1998 |
| ISBN | : | 955-20-2518-4 |
| நூலாசிரியர் | : | ஏ. வீ. சுரவீர |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| தமிழாக்கம் | : | ஏ. ஸீ. எம். ராஸீக்<br>ஸமீனா ஸஹீட் |
| அட்டை அமைப்பு | : | கருணாசிரி விஜேசிங்க |
| உள் சித்திரம் | : | பியரத்ன ஹேவாபெட்டகே |
| வர்ண அமைப்பு | : | R & P கிரபிக்ஸ்<br>கொழும்பு-08. |
| பதிப்பு | : | பசிபிக் பிரஸ்<br>267, ஆட்டுப்பட்டித்தெரு<br>கொழும்பு-13. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டாளருரை

எனது நிறுவனத்தால் வெளியிடப்படுகின்ற எல்லா புத்தகங்களையும் என்னால் வாசிக்க முடியாதுபோனாலும் நேரம் கிடைக்கின்றபோது சில நூல்களையாவது வாசிக்க ஆசைப்படுகிறேன் . பேராசிரியர் ஏ.வீ. சுரவீர அவர்களின் நாவல்களையும் சிறுகதைகளையும் வாசிப்பதை பழக்கத்தில் கொண்டுள்ளேன். அவரது பவதிமிர என்ற சிறுகதை தொகுப்பு என் கவனத்தைத் தற்செயலாக ஈர்த்தது. அதில் மினிஸ்கம ஹா ரஜகம என்ற கதையைப் படிக்கும் பொழுது பலவித எண்ணங்கள் கிளர்ந்தெழுந்தன. இலங்கை போன்ற சிறிய நாடு ஒன்றில் வாழ்கின்ற சிங்கள, தமிழ் இனங்களான நாம் எப்போதும் இனம், சமயம் போன்றவற்றால் வேறுபட்டு ஒருவரையொருவர் மாய்த்துக் கொள்வதில் எவ்வித பயனும் இல்லை. இதனால் பாரிய அனர்த்தங்கள் ஏற்படுகின்றமை கண்கூடு. இதனை இக்கதை சித்தரிக்கிறது. எனவே இக்கதையை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரித்து இயன்ற அளவில் வாசகரிடம் பிரசித்தப்படுத்துவதே நோக்கம்.

நான் பிரதி அமைச்சர் சுரவீர அவர்களிடம் இக்கருத்தை முன்வைத்தேன். அதனை அவ்வாறு பிரசுரிப்பதால் ஏதும் பிரயோசனம் ஏற்படும் என்றிருந்தால் அவ்வாறு செய்வதில் தவறில்லை என அவர் கூறினார். இப்போது மினிஸ்கம ஹா ரஜகம என்ற நூல் உங்கள் கைக்கெட்டியுள்ளது. இக்கதையிலுள்ள இலக்கியச் சுவையைப் பரிசீலிப்பதோஅதன் குணநலன்களைத் தொட்டுக் காட்டுவதோ எனது பொறுப்பல்ல. இதனைப் படித்த உடன் எனது மனதின் சிந்தனைகள் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ந்தெழுந்தனவோ அவ்வாறு உங்கள் மனதிலும் ஏதாவது கருத்து மாற்றம் ஏற்பட்டால் அதுவே எனது எதிர்பார்ப்பின் வெற்றியாகும். வாசகரின் மனதில் பாரிய அளவில் சுவையூட்டக்கூடிய இவ்வாறான கதைகள் அந்நியோன்னியப் புரிந்துணர்வினைப் பின்னணியாகக் கொண்ட மனித நேயத்தினால் போசிக்கப்பட்ட நியாயமான சமுதாயத் தினைக் கட்டி எழுப்புவதற்கு ஏதுவாகுமென நான் நம்புகிறேன்.

*சிரிசுமன கொடகே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இக்கதை முதலில் பிரசுரமாகி நீண்ட இடைவெளிக்குப் பின் எனது பவித்திமிர என்ற சிறுகதைத் தொகுப்பில் 1984 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது. நான் எப்போது இக்கதையை எழுதி முடித்தேன் என்பதை நினைவிலிருத்த முடியவில்லை. நான் இவற்றைத் தேடிப்பிடித்து மீண்டும் கறுப்பு ஜுலை 1983 இற்குப் பிறகு எழுத முற்பட்டேன். அதன் பின்னர் எதிர்பாராத விதமாக எனது பிரசுர நண்பர் திரு. சிரிசுமன கொடகே எனக்குத் தொலைபேசி மூலம் ஞாபகப்படுத்தும் வரை முற்றாக அதனை மறந்திருந்தேன்.

இக்கதையை தனியாக எடுத்து சிறு நூலாக அதுவும் ஏனைய மொழிகளான ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழி பெயர்த்தால் என்னவென்று திரு. கொடகே அவர்கள் தன் கருத்தை திரும்பவும் தெரிவித்தார். இது இக்காலத்தின் தேவை. இக்கதையில் இலக்கியச்சுவை தேடுவதைவிட இனங்களுக்கிடையில் உள்ள பிரச்சினைகளுக்கு சிறந்த பரிகாரமாக இக்கதை திரும்பவும் வாசகர் மத்தியில் செல்ல வேண்டுமென உறுதியாக இருந்தார். அதனை மறுத்துரைக்க காரணமிருக்கவில்லை.

இக்கதை என்னால் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது. இக்கதைக்கு துட்டகை முனுவினதும் எல்லாளனதும் பிரபல யுத்தமே கருவாக அமைந்தாலும் எனது மனதைக் குழப்பிய 1983 கலவரத்தின் பின்னர் புதுவடிவம் கொண்டு எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய, சமூக தேவைகளைக் கருத்தில் கொண்டு பிரசுரிக்க ஏற்றுக் கொண்ட திரு. எஸ்.கொடகே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஊக்குவிப்பினாலேயே இக்கதை மீண்டும் வெளிவருகிறது. இல்லாவிட்டால் 1983 ஆம் ஆண்டுடன் இக்கதை தனிமைப்பட்டிருக்கும். அவ்வாறாக முன்வந்து உற்சாகப் படுத்தி முன்னுரையுமளித்த பேராசிரியர் நந்நசேன ரத்னபால அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள வேண்டும். எனது மொழிபெயர்ப்பை தொகுத்துத் தந்தமைக்காக செல்வி. மங்கலிக்காவுக்கும் எனது நன்றியை கட்டாயம் தெரிவிக்க வேண்டும். திரு. குமாரசிரி அழகுற அட்டையை அமைத்துத் தந்தார். திரு. ரஞ்சித் ஊறவா பெத்தகே உட்புற வேலைகளைத் திறம்பட அமைத்துத் தந்தார். திரு. பொபி பொதேஜு, திரு. ரத்தினசிரி அரங்கல ஆகியோர் மேற்பார்வை செய்து முன்னெடுத்துச் சென்றனர். இவர்கள்அனைவருக்கும் எனது நன்றிகள்.

கொடகே அவர்களது உற்சாகத்தால் இக்கதையை இப்போதுசிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் வெளியிட சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இச்சிறுகதையை தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்து தந்த ஜனாப். ஏ ஸீ.எம். ராஸீக், ஸமீனா ஸஹீட் ஆகியோருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஏ. வீ. சுரவீர*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# பேராசிரியர் ரத்னபால அவர்களின் ஆய்வுரை

பேராசிரியர் ஏ.வீ.சுரவீர படைப்பிலக்கியத்துறையில் நிபுணத்துவம்பெற்றஎழுத்தாளர்களில் ஒருவராவார்.அவரால் எழுதப்பட்ட நாவல், சிறுகதை, இலக்கிய விமர்சனங்கள், விருதுகளையும் தட்டிச் சென்றன. மினிஸ்கம ஹாரஜகம, பவதிமிர என்ற பெயரில் 1984 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அது கதாசிரியராலேயே ஆங்கில மொழிக்கு பெயர்க்கப் பட்டுள்ளது. வன்செயல்களும் யுத்தமும் என்பதை கருவாக அமைத்து மானுட தருமத்தினை ஆழமாக விளக்கிச் செல்லும் இக்கதை நிரந்தர துயரொன்றை விளக்குவதாக உள்ளது.

துட்டகைமுனு மன்னனால் எல்லாள மன்னன் தோற்கடிக்கப்படுவதில் இருந்து கதை ஆரம்பமாகிறத. கடும் சமருக்குப் பின்னர் மரணத்தை தழுவிக்கொள்ளும் எல்லாளனின் பூதவுடல் சிதையில் தீப்பற்றி எரிகிறது. எல்லாளனின் சிதை தீப்பற்றி எரிந்து தீச்சுவாலைகள் கொழுந்து விட்டுப் பரவும் போது எல்லாளனுக்கு ஏற்பட்ட கதிபற்றி கமுனு மன்னன் சிந்திக்கலானார். அதன் பிரதிபலிப்பு ஆயிரக்கணக்கில் மரணித்த மக்கள் மேலும் பரவிச் செல்கின்றது.

இக்கதையில் எல்லாளன் இலங்கையின் ஆட்சியைப் பலவந்தமாக ஆக்கிரமிப்புச் செய்தவனாகவே சித்தரித்துக் காட்டப்படுகின்றான். எனினும் அவன் தார்மீகக் கொள்கை யின்படி இந்நாட்டை ஆள்வதற்கு முயற்சி எடுத்தான். அவ்வாறாயினும் அவன் ஆக்கிரமிப்பாளனாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபடியால் அவனது ஆட்சிக்கு இந்த நாட்டு மக்களின் ஆதரவு கிட்டாமை இயற்கையானதாகும். ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக வெற்றிகரமாக சேனையை ஏற்பாடு செய்த துட்டகைமுனு எல்லாளனைத் தோற்கடித்தான்.

இவ் யுத்தம் இங்கு வாழும் பரம்பரைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கும் இடையிலான மோதல் என முன்வைக்கப் படாமல் இருக்க ஆசிரியர் பொறுப்புடன் செயல்பட்டுள்ளார். சிங்களவர்களும் தமிழர்களும் அவ்விரு தரப்புப் படைகளிலும் சேர்ந்து போரிட்டனர். அரசுரிமை கொண்ட ஒருவனுக்கும் ஆக்கிரமிப்பாளன் ஒருவனுக்கும் இடையிலேயே சண்டை நிகழ்ந்தது. அதுவொரு இன மோதலாக இருக்கவில்லை. இச்சண்டை இரு இனச்சமுகத்துக்கு இடையிலான மோதலாக அன்றி இறுகிய எல்லைகளைக் கடந்து எப்போதும் எங்கேயும் நடைபெறக்கூடிய ஒரு மோதலாக இக்கதை உருவாக்கப் பட்டுள்ளது. மனிதன் ஏனைய மனிதர்கள்மீது மிலேச்சத்தனமாக செயல்படும் குரூரத் தன்மை இக்கதையின் கருப்பொருளாக அமைந்துள்ளது. அது காலம், இடம், தேசம் என்ற எல்லைகளைக் கடந்து நிற்கும் யதார்த்தமாகும்.

எல்லாளன், துட்டகைமுனு ஆகிய இரு பாத்திரங்களின் சமமான குணங்களை இரண்டறக் கலந்து இம் மானிட அவலம் முனைப்புப் படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட பாரிய அழிவினால் துட்டகைமுனு மிகவும் கவலை கொள்கிறான். கலிங்கயுத்தத்தின் பின் அசோக மன்னன் எவ்வாறு கைசேதப்படுகிறனோ அவ்வாறே துட்டகை முனுவும் யுத்தத்தின் பின் பச்சாத்தாபப்படுகிறான். தான் அவ்வாறு மனக்கிலேசம் அடையும் தினத்தில் துட்டகைமுனுவிற்கு எல்லாளன் நினைவில் வருகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவாரியாக எத்தகைய பயந்தாங்கொள்ளித் தனமும் காட்டாமல் எல்லாளன் தைரியமாக இறுதி மூச்சு விட்டமை அவனது மனதில் பதிந்து கிடந்தது. அறநெறியில் நாட்டை ஆள எடுத்த முயற்சிகளை அவன் குறிப்பிட்டான். நடந்து முடிந்த மானிடப் படுகொலைக்குச் சமமான அழிவொன்று மீண்டும் இந்நாட்டில் ஏற்படாது தவிர்க்க வேண்டும் என்பது எல்லாளனின்' இறுதிவேண்டுகோளாக இருந்தது. துட்டகைமுனுவின் இறந்தகால நினைவுகளைமீட்டுதல் மூலம் அவனது குணாம்சங்கள் தத்ரூபமாகக் காட்டப் படுகின்றன.

"மன்னனுள் ஒரு மனிதன்" என்ற கதையில் இவ் இரு அரசர்களும் அரச அந்தஸ்த்தை நடத்த மனித நேயம் கொண்டவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். தனது மகனுக்கு எல்லாளன் காட்டும் அன்பின் மூலம் பொதுவாக தந்தைக்கும் தனயனுக்கும் இடையிலான பாச உணர்வுகள் சித்தரிக்கப்படுகின்றன.எல்லாள மன்னனின் மகன் செலுத்திய வண்டிச் சில்லுக்கு அப்பாவி கன்றுக் குட்டியொன்று பலியாகிறது. அது தண்டனை வழங்கப்படவேண்டிய அளவிலான குற்றம் ஒன்றல்ல. எல்லாளனின் மகன் மதத்தலங்களை அழித்து அவற்றில் புதைக்கப்பட்டுள்ள பொக்கிஷங்களைச் சூறையாடியவன் எனத் தனக்குக் கிடைத்த செய்திகள் துட்டகைமுனுவின் ஞாபகத்திற்கு வந்தது. அவ்அநியாயத்தைப் பௌத்தர்கள் கண்டித்தனர்.

அறநெறி கொண்ட ஆட்சியாளனான எல்லாளன் தனது மகனின் நடவடிக்கைகளை அறிந்து வைத்திருந்தான். மகனின் குற்றச் செயல்கள் பற்றித்தெளிவான முறைப்பாடுகள் கிடைத்த பொழுது எல்லாளன் செயல்பட்டான். தனது மகனுக்கு அவன் மரண தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியது இப்பின்னணியிலாகும். எனினும் தந்தை என்ற வகையில் தனது செயலுக்காக எல்லாளன் மிகவும் மனம் வருந்தினான். மகனை எரித்த அஸ்தியை தங்கப் பேழையில் இட்டுத் தனது படுக்கைஅறையில் வைத்தான். துட்டகைமுனுவுடன் நேரடிச் சண்டையில் ஈடுபட முன்னர் எல்லாளன் தனது மகனின் அஸ்திப் பேழையை முத்தமிட்டு இறுதியாகத் தனது பாசத்தை வெளிப்படுத்தினான்.

மற்றொரு புறத்தில் கைமுனு மன்னனின் விசேட மானிட உயர்வுகள் இக்கதையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. எல்லாளனின் மரணத்துடன் ஆரம்பத்தில் கைமுனுவின் மனவேதனை அதனை தொடர்ந்து நடந்த எல்லாச் சம்பவங்களாலும் மேன்மேலும் அதிகரிக்கிறது. இவ் அர்த்தமற்ற செயல்களுக்கும் யுத்தங்களுக்கும் பரிகாரம் இல்லையா? அவன் தனது அமைச்சர்கள், படையினர்களிடம் மட்டுமன்றி பௌத்த சங்கத்தினரிடமும் கேட்கிறான். சில பிக்குகள் அவனது மன வேதனையைக்குறைக்கமுயற்சிக்கின்றனர். கைமுனுவின் படையின் பின்னால் சென்ற சில பிக்குகளும் அவ்வாறு மனவேதனை அடைந்து தமது வாசஸ்தலங்களுக்குத் திரும்பிச் சென்ற வண்ணம் இருந்தனர். கைமுனு மன்னனை போன்று பிக்குகளும் யுத்தத்தின் அகோரம் பற்றி வினா எழுப்ப முனைந்த ஒரு சந்தர்ப்பத்தில் எல்லாளனின் பிரசித்தி பெற்ற ஆலாட்சி மணி அடிக்கப்படும் ஒலி கைமுனுவுக்குக் கேட்டது. குலமகன் ஒருவனுக்குப் பாரதூரமான அநீதி இழைக்கப்படும் போது அது பற்றி அரசனின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டே அவ் ஆலாட்சி மணி பொருத்தப்பட்டிருந்தது. எல்லாளனின் காலத்தில் ஆலாட்சி மணியை அடித்த பசு மாடொன்றின் முறைப்பாட்டின்படி அவனது மகனுக்குக் கூட மரணதண்டனை வழங்கப்பட்டது.அந்த ஆணைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

எல்லாளனின் படைக்குச் சேர்க்கப்பட்ட ஒரு மனிதனின் மனைவியே ஆலாட்சி மணியை அடித்தாள். அம்மனிதன் யுத்தத்திலிருந்து திரும்பி வந்த சமயம் அவனைக் கொன்று அவனது குடிசையும் அழிக்கப்பட்டது என அப்பெண் முறைப்பாடு செய்தாள்.

இச்சம்பவத்தால் துட்டகைமுனுவின் மனம் மிகவும் வருந்தியது. இதன் பின்னர் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என ஆணை இடப் பட்டது. அம் மனிதன் அனுராதபுரத்தில் வாழ்ந்ததனாலேயே அன்றி சிங்களவர் களுடன் யுத்தம் செய்யும் நோக்கத்தில் எல்லாளனின் படையில் சேரவில்லை. தமிழ் இனத்தவனான அவன் சிங்களப் பெண்மணியை மணமுடித்திருந்தான். "மன்னா உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும். என்னிடம் சிங்களம், தமிழ் என்ற பேதம் கிடையாது, யாவரும் ஒன்றே. கைமுனு மன்னன் இப்பெண்ணை ஆசுவாசப்படுத்த முயன்றான். அவளது வீட்டைத் திருத்தி வாழ வழியும் வகுத்தான்.

தனிப்பட்ட ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ பிரச்சினை இனப் பிரச்சினையாக மாறும் விதம் இச் சம்பவத்தின் மூலம் தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரவாசி என்பதால் அவனுக்கு நாட்டின் ஆதரவாக யுத்தத்திற்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.தனது கடமையைச் செய்த அவன் மீண்டும் வீடு திரும்பினான். அவனது மகள் ஒரு தமிழனையே மணம் முடித்திருந்தாள்.அவன் தமிழனாக இருப்பதுபோன்றே மகளும் தமிழன் ஒருவனுடன் மணம் முடித்திருப்பதும் ஒரு சந்தர்ப்பவசமான நிகழ்ச்சியாகும். எனினும் பாரம்பரிய உணர்வு கொண்டவர் களுக்கு அது மிக விசேடமான சம்பவமாகும். இத் தமிழ்ப் பெண் தொடர்பான சந்தர்ப்பவசச் சம்பவம் சிங்களப் பெண் ஒருத்திக்கும் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சம்பவங்கள் மிக ஆழமாக மனித மனங்களுக்குள் பதியக்கூடியவாறு உருவகப்படுத்தி அதனோடு சம்பந்தப்படுத்தப்பட்ட அவலங்களைச் சித்தரிப்பதில் இவ் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார். அவ் வேதனைகளை அனுபவித்த மக்களின் உணர்வுகள் மட்டுமன்றி யுத்தத்தின் பின்னர் துட்டகைமுனு மன்னனின் மனதில் தோன்றிய உணர்வுகளும் மிகப் பரவலான தேசியப் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இச் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ன? ஓர் ஆட்சியாளர் அல்லது அரசன் யுத்தத்தைஅல்லது பாதகச் செயல்களை முற்று முழுதாகப் புறக்கணிப்பதில் வெற்றிகாண முடியுமா? இப்பின்னணியில் நாட்டைக் காப்பாற்றுவது எவ்வாறு? எல்லாளனின் மரணத்தின் பின்னர் அவனது மருமகனான பகல்லுக படைகளைத்திரட்டி யுத்தத்திற்கு வந்தபொழுது இப் பிரச்சினை எழுந்தது. யுத்தம் புரிந்து நாட்டைக் காப்பாற்ற ஆயிரக்கணக்கில் படையினர் தேவைப்பட்டது. துட்டகைமுனு அதைப் பற்றிச் சற்றேனும் யோசிக்கவில்லை. முன்னைய யுத்தத்தில் ஏற்பட்ட மனித அழிவு பற்றிய வேதனை அவனது மனதை விட்டு அகலாமல் இருந்திருந்ததாலாகும்.

கைமுனு மன்னனால் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும் நாட்டுக்காகவும் மதத்துக்காகவுமே என்று கூறிய மகா சங்கத்தினர் அவனை ஆறுதல்படுத்த முற்பட்டனர். எனினும் கைமுனு மன்னனின் உணர்ச்சிகளோ அதைவிட ஆழமான வழியில் வெளிப்பட்டன.எல்லாளனின் இறுதியான சொற்கள் அவனது மனதைக் கிளறிக் கொண்டிருந்தன. இதன் பிறகு எப்போதாவது இவ்வாறான அழிவுக்கு இடமளிக்கலாகாது என்பதே எல்லாளன் வேண்டுகோளாக இருந்தது. அது கைமுனுவின் காதுகளில் ஒலித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது.அவ்வொலி எல்லோரினது இதயத்திலும் எதிரொலிப்பதாக கைமுனுவிற்கு விளங்கியது.

கைமுனுஅரசனின் பத்து மாமல்லரில் ஒருவரான தெரபுத்தாபய எல்லாச் செயல்களிலிருந்தும் ஒதுங்கிக் கொள்ளத் தீர்மானித்திருந்தான்.உள் பிரச்சினையைக் குறைப்பதன் மூலம் வெளிப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். யுத்த களத்திலிருந்து மீண்டும் தமது வதிவிடம் நோக்கி வரும் பிக்குமாரிடம் இதே தீர்வு வெளிப்படையாகத் தெரிந்தது.

எனினும் கைமுனு அரசனின் பிரச்சினை அதைவிட வேறுபட்டதாக இருந்தது. கனவில் போலத்தோன்றி தனது அருகில் வந்த தனது தந்தை கூறிய சொற்கள் அவனது நினைவிற்கு வந்தன. போனது போகட்டும் . தற்போது செய்யவேண்டியது யுத்தமும் அட்டூழியமுமற்ற சூழலொன்றை யுடைய எதிர்காலத்தை அமைப்பதாகும் என்பதே இக்கதையின் கருவாக அமைந்ததுபோல இந்தக் கதா சிரியரதும் நோக்கமுமாகியது. கைமுனு எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கு இவ்வெழுத்தாளர் தீர்வுகளை காட்டவில்லை. எனினும் விவேகமுள்ள, பொறுப்பு வாய்ந்த எல்லா ஆட்சியாளர்களும் எதிர்நோக்கும் ஆழமான பிரச்சினையாக இங்கு காட்டியுள்ளார். இங்கு கதாசிரியர் கைமுனுவின் எண்ணம் பற்றிய விமர்சனத்தில் ஈடுபடுகிறார். எல்லாக் கோணங்களிலும் அட்டூழியத்தினை விமர்சிக்க முழு முயற்சி எடுக்கிறார்.

இக்கதையில் துட்டகைமுனு, எல்லாளன் ஆகிய இருவரும்அரச பொறுப்பை ஏற்ற ஆட்சியாளராக மட்டும் காட்டப்படவில்லை.மனிதப் பண்புகள் நிறைந்த உயர் மனிதர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். அவர்கள் மக்கள் சமூகத்தோடு ஒன்றிப்படைக்கப்பட்டுள்ளனர். அழிவுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு துக்கப்படுகின்றனர். இலட்சக்கணக்கான சமூகப்பிரச்சினைகளைக் கண்டு துக்கமும் அதிர்ச்சியும் அடைகின்றனர். சமூக நீதி எனும் அறிவு தீப்பிழம்பாய் எரிகிறது. துட்டகைமுனுவும் தமிழரிற் பழிவாங்காமை தனது இனத்தவரிடம் காட்டிய பரிவல்ல, மனிதத்தன்மையிடம் காட்டிய பரிவாகும். எல்லா மானிடமும் சரிசமமாக மதிக்கப்பட அவன் கருத முற்பட்டமை அவனது இதயத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் பலனாகும். துட்டகைமுனு, எல்லாளன் இருவரும் மனித வர்க்கத்தைப் பற்றி மட்டுமன்றி மிருக வர்க்கத்தின் உரிமை பற்றியும் கவனம் செலுத்தினர்.

பேராசிரியர் சுரவீரவின் மினிஸ்கம உறா ரஜகம எனும் இக்கதை ஒரு விசேட ஆக்கமாகக் காரணம் அது கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் ஒரேவாறு மனதில் கொண்டு பலத்த சமூக அனர்த்தத்தை சித்தரிப்பதனாலாகும். இக்கதை எல்லா மானிட வர்க்கத்தினரையும் பார்த்து விளிக்கிறது. உள்மனதிலிருந்து ஏற்படும் பாரிய உணர்ச்சிகளை மூலமாகக் கொண்டு வெளிப்படுகின்றது. சிறுகதையாகையினால் தனிப்பட்டஅல்லது கூட்டான சமூக இடர்பாடுகளுக்குத் தீர்வு கூறப்படவில்லை. ஒவ்வொரு சிறு கதையிலும் அவ்வாறான தீர்வு எதிர்பார்க்கப்படுவதில்லை. எனினும் இக்கதையில் தனிப்பட்டதும் கூட்டானதுமான அனர்த்தங்களுக்குக் காரணம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக்கதையைப் படிக்கும் ,மீண்டும் மீண்டும் படிக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மனிதனுள் இருக்கும் மனிதத் தன்மை பற்றி தேடிப்பார்க்கும் பொறுப்பு விளக்கப்படுகிறது. அத்துடன் இக்கதை உலகத்தை அழிவுக்கு இட்டுச் செல்லும் யுத்தத்திலும்அட்டூழியத்திலும் மனிதத்தன்மைக்கு அப்பாற் பட்ட காரணிகளை மேலும் வெளிப்படுத்தித் சிந்திக்க வைக்கிறது.

*பேராசிரியர் நந்தசேன ரத்னபால*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனுள் ஒரு மனிதன்



வெள்ளைச்சீலையால் அலங்கரிக்கப்பட்டிருந்த சிதைக்குத் தீமூட்டிய பின்னர் முதலில் கரும்புகைச் சுருள்கள் மேலெழுந்து செல்ல ஆரம்பித்தன. அந்த கனத்த கரும்புகை மூட்டத்தினை அடிமைப்படுத்திக் கொண்டு சொற்ப கணத்தில் தீச்சுவாலைகள் மேலெழுந்து சென்றதைப் பார்க்கும் பொழுது இறந்த வருடன் வைராக்கியங்கொண்டு வீறுகொண்ட சிப்பாய்களாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. இரண்டு வகையான தீச்சுவாலைகளும் ஒன்று சேர்ந்தபோது சிதையைச் சுற்றியிருந்த மக்கள் கூட்டத்தினர் கோஷமிட்டனர்.

"ஜயஸ்ரீ எங்கள் அரசர் வாழ்க! புத்தசாசனம் ஓங்குக! சோழர் வீழ்க! தமிழரின் பலம் நாசமாகட்டும்..."

தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த சிதையை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த கமுனு அரசனின் மனதில் தாளாத அதிர்ச்சி, பச்சாதாபம், கோபம். காமினி சுற்றும் முற்றும் பார்த்தான். எல்லாள மன்னனின் கீழ் சேவை புரிந்த தமிழ், சிங்கள அமைச்சர்கள் உட்பட ஏனைய பிரபுக்கள் கவலை தோய்ந்த முகத்துடன் எரிந்து கொண்டிருக்கின்ற சிதையை நோக்கிய வண்ணமிருந்தனர். தமிழ் அமைச்சர்களும் பிரபுக்களும் தங்கள் மன்னனின் இழப்பால் கவலையுறுவது புதினமல்ல. எனினும் எல்லாளனிடம் சேவையாற்றிய சிங்கள அமைச்சர்கள், மந்திரிமார் கவலையுடன் இருப்பதை கமுனு மன்னனால் புரிந்து கொள்ள முடியாமலிருந்தது. சாதாரண குடிமகன் எல்லாளனுக்கு ஏற்பட்ட கதியை எண்ணி களிப்புக் கொண்டிருந்தாலும் ராஜபுருஷர்கள், பிரபுக்கள் இன, மத, பேதமின்றிக் கவலை கொண்டுள்ளதன் மர்மம் என்ன?

எல்லாளனின் தார்மீக மத்தியஸ்த நிர்வாகம் தொடர்பான செய்தி இராஜரட்டையைத் தாண்டி றுகுணு வரைக்கும் சென்றிருந்தது. நடுநிலையான தார்மீக ஆட்சியின் தெய்வீக பலம் இராஜபுருஷர்களையும் பிரபுக்களையும் கொண்ட வரப்பிரசாதங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

அனுபவிக்கின்ற ஒரு பிரிவினராக இருந்து விடுவார்களோ என்ற பீதி கமுனுவின் மனதில் எழுந்தது. எல்லாளனின் ஆட்சியிலிருந்து சுதந்திரம டைவதை சாதாரண மக்கள் விரும்பினாலும், தமிழர், சிங்களவர் என்ற பேதமின்றி பிரபுக்கள் கவலையடைந்துள்ளதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

எவ்வாறெனினும் இப்போரின்போது சிங்கள வர்களில் பலர் தனக்கு உதவி புரிந்தனர் என்பதில் சந்தேகமில்லை. றுகுணுப் பிரதேச மக்களின் மாத்திரம் அல்ல இலங்கையின் முப்பகுதி சிங்கள மக்களினதும் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்வதன் மூலம் பயன் பெறச் செய்தமை பெரும் பாக்கியமாகும்.

"எனது இப்போதைய முயற்சி ராஜபோகம் அனுபவிப்பதற்கல்ல. இம்முயற்சி சிங்களவரின் இறை மையையும், புத்த சமயத்தின் ஸ்திரத் தன்மையையும் பாதுகாக்கவுமே. சிங்கள இனத்தையும், புத்த சமயத்தையும் பாதுகாப்பதற்கும்..."

திஸ்ஸ மஹா விஹாரையின் நாயக்க தேரரின் ஆலோசனைப்படி எழுதப்பட்ட இச்சுலோகங்கள் தாரக மந்திரமாகவுள்ளதை கமுனு அரசனுக்கு இப்போதுதான் புரிந்துள்ளது. எல்லாளனின் ஆட்சியின் வரப்பிரசாதங களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பிரபுக்கள் கூட்டம் எப்படிப் போனாலும் நாட்டு மக்கள் தனக்குச் சார்பாகச் சேர்ந்து கொள்வதற்கு இந்த உயிர்த்துடிப்புள்ள வாசகங் களே காரணமாயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான எல்லாச் சிந்தனைகளுக்கு மத்தி யிலும் காமினியின் கண் எதிரே எல்லாளனின் உருவம் வந்து நிழலாடிக் கொண்டிருந்தது. தன்னைவிட மும்மடங்கு வயதில் கூடிய தமிழரசன் அஞ்சாநெஞ்சனாய் யுத்தம் புரிந்தான். வயதால் முதிர்ந்த அந்த உடம்பில் கூட அவனின் வீரம் பொதிந்து கிடந்தது. மலைபோன்ற யானை மேலிருந்து வீழ்ந்த எல்லாளன் வாய் திறந்து, இமை விரித்து தன்னைப் பார்த்திருந்தது, மரண பீதியினால் அல்ல வென்பதை காமினி ஞாபகம் வைத்திருந்தார். அது எவ்வாறெனினும் நாறபத்து நான்காண்டுகள் ராஜபோகம் அனுபவித்த எல்லாள னுக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு கவலையுண்டாகின்றது. அவனுக்கு ஏற்பட்ட விதியைப் பார்த்துக் களிப்புறும் நாட்டு மக்களைக் கண்டு காமினிக்குக் கோபம்பொத்துக் கொண்டு வந்தது. அது மனிதத் தன்மைக்கு ஒவ்வாத செயலென காமினி நினைத்தான்.

மக்கள் சந்தோஷத்தில் ஆடிப்பாடும் காட்சியைப் பொறுக்க முடியாத அவர் ஆசனத்தால் எழுந்து நின்று தனது வெறுப்பைக் காட்ட முனைந்தார். அரசன் எழுந்தருளியதும் மங்கள சங்கு ஒலித்ததற்குக் காரணம் வழக்கம் போல மக்களை அமைதிப்படுத்துவதற்கு ஆகும். முச்சிங்களத்தையும் ஒன்று சேர்த்த மாவீரனின் குரலுக்குக் காதுகொடுக்கும் ஆர்வம் அங்கே மேலோங்க கூட்டம் ஒரு கணத்தில் அமைதி கொண்டது. எனினும் அங்கு வேறொன்று நிகழ்ந்தது. காமினி அமைதியாக அவ்விடம் விட்டேகினார். முன்வரிசை ஆசனங்களில் அமர்ந்திருந்த அமைச்சர்கள், மந்திரிகள், பிரபுக்கள் அவரவர் முகங்களைப் பார்த்துக் கொண்டனர். அரசர் அவரது தற்காலிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசஸ்தலத்துக்குப் போய் களைப்புத்தீர வேண்டுமென்ற ஆவலில் ஆசனத்தில் சாய்ந்து கொண்டார்.

அரசர் களைப்புற்றிருப்பதால் கொஞ்சம் ஓய்வு தேவையென்று எண்ணிய தளபதிகள் அவரவர் சைகை செய்து கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கி மண்டபத்துக்குள் நுழைந்தனர். திஸ்ஸ தேவன், தெரபுத்தாபய, துஸ்ஸதேவன் ஆகிய மூவரும் அவ்விடத்தில் தங்கினர்.

"எமது குமாரருக்கு இன்று என்ன நடந்தது...? காலையிலிருந்து மகிழ்ச்சியிழந்து காணப்படுகிறார்..." நந்திமித்திர கூட்டமண்டபத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் கதையை ஆரம்பித்தார். அவர் கமுனு மன்னனுக்கு "எமது குமாரன்" என்று வழக்கமாகச் சொல்லுமாப்போல் கூறினார்.

"இன்னுமா குமாரன்? பேரரசர் என்று சொல்ல வேண்டாமா...?" அது சரி, நந்தி சொன்னதும் சரிதான். சந்தோஷப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் அவர் போரில் தோல்வி கண்டதுபோல் கவலை கொண்டுள்ளாரே..."

"என்ன காரணம்?" கோட்டாம்பர கேள்வி எழுப்பினார்.

"தெரியாதா என்ன? குமாரரின் எண்ண மெல்லாம் சிரிமலி. அது தான் சிரிமல் தேவியை அழைத்துவர தூதுவர்கள் கோஷ்டியொன்றை அனுப்பி வைத்தாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிந்தவுடன்..." விகடனாகப் பெயர் பெற்றிருந்த சுரநிமல இங்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். தளபதிகளின் சிரிப்பொலி அரசர் இருந்த உட்கூடத்துக்குக் கூட கேட்டது.

"அதனை யாருக்குத்தான் தெரியாது. ஆனால் குமாரர் இன்னும் கடமையை மறக்கவில்லை. எமது கூட்டத்துக்கும் நேரம் சரி..." நந்திமித்திரனின் குரல் தெளிவாக ஒலித்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இன்று கொஞ்சம் ஓய்வெடுக்க வேண்டியிருக் கின்றது திஸ்ஸ. நிர்வாக சபைக் கூட்டத்தை நாளைக்கு ஒத்தி வைப்போம். நகரை அமைதியாக வைத்திருக்கவும், சமாதானத்தைப் பேணவும் தளபதிக்கு உத்தரவிடுங்கள்." நீண்ட ஆசனத்தில் மல்லாக்கப்படுத்திருந்தபடி அரசர் திஸ்ஸ தேவக்குக் கூறினார்.

விஹார மஹாதேவி காமினியின் ஆலோசகராகவும், பாதுகாவலராகவும் திஸ்ஸதேவாவை நியமித்தி ருந்தார். அன்றிலிருந்து இவ்விருவரிடையேயும் நெருங்கிய நட்பு ஏற்பட்டிருந்தது. காமினி சில காலமாக திஸ்ஸதேவாவை தனது ஆப்த நண்பனாக மதித்து வந்தான்.

"தங்களுக்கு ஓய்வு தேவை. தேவையான சகல ஏற்பாடுகளையும் தளபதிகளுக்கு அறிவிப்பேன். நாளைக்காலை சந்திப்போம். தீர்க்காயுள் குமாரரே... இல்லை... பேரரசரே..."

முன்பென்றால் அவர் பகிடியாக ஏதும் சொல்லி விட்டால், அதற்குப் பதிலையும் அவ்வாறே சொல்வது வழக்கம். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் அதனைப் பொருட் படுத்தாது முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டார். அரசர் உண்மையிலேயே களைப் புற்றுள்ளார் என்பதையும் உணர்ந்த திஸ்ஸதேவ அவ்விடத்தை விட்டு நீங்கினார்.

போசனத்தை மறுத்த அரசர் வேளைக்கே தனது சயனவறைக்குள் நுழைந்து கொண்டார். எவ்வளவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்புற்றிருந்தார் எனினும் தூக்கம் வர மறுத்தது. எண்ணஅலைகள் பொங்கியெழுந்தன. எல்லாளனின் சிதையை மூடியிருந்த வெண்ணிற ஆடையைக் கிழித்துக்கொண்டு கரும்புகை மேலெழுந்த விதமும். அக்கணமே தீச்சுவாலைகள் எரியத் துவங்கியதும் காமினிக்கருகில் நிழலாய்த் தெரிந்தன.

மாகம திஸ்ஸ மஹா விஹாரைக்குப் பக்கமாக முகாமிடப்பட்டிருந்த அந்தப் பெரிய அரணிலிருந்து வெளியேறி ஒவ்வொரு தமிழ் அரணையும் சுக்கு நூறாக்கி வெற்றிவாகை சூடிக்கொண்டு சிங்கள வீரர்களின் வாள்வீச்சிலும் அம்பிலும் சிக்குண்டு வீழ்ந்துகிடந்த தமிழ் சிப்பாய்களின் உதிரத்தால் தாம் நனைந்து தோயும் போது களிப்புற்றும், சிங்கள வீரர்கள் சரிந்து விழும்போது கவலை கொண்டும் அநுராதபுரம் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்ததும் அரசருக்கு ஞாபகம் வந்தது.

விஜிதபுர இரும்பு வாயிலுடன் அமைந்திருந்த மதிலை உடைத்து காவல் அரணுக்குள் அகப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் சேனை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததையும் அதனை ஞாபகப்படுத்தும் போது மனம் வீரத்தால் பொங்கியெழுந்த விதமும் காமினிக்கு ஞாபகமிருந்தது. விஜிதபுரத்தில் சிக்குண்ட தமிழ் மக்களின் மரண ஓலத்தைச் சகிக்க முடியாத தெரபுத்தாபய என்பவன் முகாமுக்கு பின்னாலிருந்த குடிசைகளிலிருந்த பிக்குகளைத தேடி ஓடிய விதம் அவரின் ஞாபகத்துக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அபய! உம்முடைய செயல் தளபதிக்குரியதல்ல; யுத்தகளத்தில் மடியும் எதிரியைப் பார்த்து அனுதாபப்படுவது வீரனின் லட்சணமல்ல. இப்படியான சந்தர்ப்பங்களில் கவலைப்படுபவர் பெண்ணின் குணம் படைத்தவர்கள். எதிரிக்குக் கொடுக்க வேண்டிய விருந்து வெட்டி, குத்திக் குதறி அவனை அடியோடு இல்லாதொழிப்பதேயல்லாது வேறென்ன?

தான் அன்று தெரபுத்தாபயவுக்கு இவ்வாறு பேசினேன். ஆயினும் இன்று? அன்று விஜிதபுர தீப்பற்றி எரிந்தபோது அங்கு சிக்கித் தவித்த தமிழர்களின் மரண ஓலம் எதிரொலித்து மனதைத் துன்புறுத்தியது. தெரபுத்தாபயவின் வேதனை தன்னையும் ஆட்கொண்டுள்ளதாய் காமினி உணர்ந்தார். மனித உணர்வுகள் கணத்துக்குக் கணம் மாறும் விதம்!

விஜிதபுரத்தைக் கைப்பற்றிய பின்னர் நடைபெற்ற வெற்றிவிழா அச்சமரைப் போலவே அதிவிசேடமாக விருந்தது. யுத்தகளத்தில் மதுபானம் அருந்துவதற்காக இடப்பட்டிருந்த தடையுத்தரவு, அன்று நீக்கப்பட்டி ருந்ததால் எல்லோருக்கும் போதையேறியிருந்தது. தெரபுத்தாபயவும் தானும் மாத்திரந்தான் மது அருந்தா திருந்தது அரசருக்கும் ஞாபகம். போதையிலிருந்த சில சிப்பாய்கள் கூறிய பகிடிக்கதைகளை தெரபுத் தாபய கண்க்கிலெடுக்கவில்லை. எனினும் அவனுக் குள்ளிருந்த கவலையின் அர்த்தம் தற்போது புரியக் கூடியதாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த முகாமுக்குப் பின்னால் குடியிருந்த பிக்குகளில் பன்னிருவர் மறுநாள் காலை தன்னை சந்திக்க வந்தது காமினிக்கு ஞாபகம் வந்தது.

"கமுனு குமாரரே, நாம் பன்னிருவரும் மீண்டும் றுகுணுப் பிரதேசம் போகத் தீர்மானித்துள்ளோம். அதனைக் கூறவே இங்கு வந்தோம்..."

அவர்களின் மனமாற்றத்துக்கான காரணத்தை அம்மதத்தலைவர்கள் சாடையாக வெளிக்காட்டினார்கள். அதன் காரணம் இப்போதுதான் தெளிவாகின்றது. கோட்டைக்குள்ளிருந்த மக்களின் இழப்பால் அவர்கள் கவலையடைந்திருக்கலாம்.

"சிங்களச் சேனைகள் ஒவ்வொரு யுத்தத்திலும் வெற்றிவாகை சூடிக்கொண்டது போலவே இனிவரும் போர்களிலும் வெற்றியீட்டுவார்கள் என்பதும் தெளிவாகின்றது. எனினும் யுத்தத்தால் இறந்து காயப்படுகின்ற தமிழ், சிங்கள மக்களைப் பற்றி அவர்கள் கவலை கொண்டிருக்கலாம். யுத்த முனையில் இருசாரரும் வெட்டிக் குத்திக் கொள்வதிலேயே முனைப்பாயிருப் பார்கள். அப்போர்களின் போது இறந்தவர்களின் சடலங்களையும், ரணங்களையும் எம்மைவிட இவர் களே கண்டிருப்பார்கள். அதனால்தான் இப்பிக்குமார் இவ்வாறான முடிவை எடுத்திருப்பார்கள்." என்று தெரபுத்தாபய விளக்கமளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேகரிப்புப் பகுதி

"யுத்தமென்றால் எதிரியை வெட்டிக் கொலை செய்வதல்லாது வேறு என்ன? கருணை, இரக்கம் இவற்றுக்குப் போர்க்களத்தில் இடமில்லை. எமது கரங்களால் எத்தனைபேர் இறந்தாலும் எமது நோக்கம் உன்னதமானது." அன்று தன்னால் தேரபுத்தாப யவுக்கு இவ்வாறுதான் பதிலளிக்கப்பட்டது.

"உண்மையோ, பொய்யோ எதுவென்றாலும் தங்களை விட்டுச் செல்ல என்னால் முடியாது. அதனால் இறுதிவரை போராடுவேன்."

அன்று அந்த பிக்குவும் தேரபுத்தாபயவும் எவ்வளவு மனதால் வேதனையடைந்திருப்பார்கள் என்பதை காமினி இப்போது உணர்ந்துள்ளார். அவ்வேதனை பல்லாயிரம் மடங்காக உணரப்பட்டதால்தான் மன்னனால் கட்டிலில் சாய்ந்திருக்க முடியவில்லை. அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தார்.

கமுனு குமாரனின் தற்காலிக வாசஸ்தலமாக அமைந்தது எல்லாளனின் அரச மாளிகை அல்ல, அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள மாளிகையாகும். அது எல்லாளனின் மகன் சிவபதியின் மாளிகை என்பது காமினிக்குத் தெரியும்.

அரசன் அங்கு தனியாக உலாவப் பீதியடைந்தான். மாளிகையில் இடத்துக்கிடம் எரிந்து கொண்டிருந்த விளக்குகளிலிருந்து வீசிய ஒளி அரசனின் சயன அறைக குள்ளும் பட்டுத்தெறித்தது. அவ்வொளிக் கீற்றுக்கூடாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்திலிருந்து மேலே பார்த்து குரைத்துக் கொண்டிருந்த நாய்களின் ஓசையும் நரிகளின் ஊளைச் சத்தமும் அரசனை வந்து கவ்விப் பிடித்த மாதிரி ஒரு பிரமை. தூக்கிய காலை கீழே வைப்பதற்குக் கூட அரசருக்குப் பயமாக இருந்தது. அதனால் அரசர் சயனத்தில் அமர்ந்து கொண்டார். சிவபதி குமாரருக்கு மரண தண்டனை வழங்க தீர்ப்பளிக்கப்பட்டது எல்லாளனால் என்பது காமினிக்கு ஞாபகம் வந்தது. சீறி எழுந்த பௌத்த பலத்தைக் கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் மக்கள் தீர்ப்புக்கு சிரம் சாய்ப்பதாய் பாசாங்கு காட்டுவதற்காக தன் மகனையே கொலை செய்தான் என்பதாக மாகமவுக்கு தகவல் கிடைத்திருந்தது. தெரியாத் தனமாக இளங்கன்றை கொலை செய்த குற்றத் திற்காக தனது இளம் குமாரனையே கொலை செய்த அரசனை பலவீனன் என்றும், மிருகம் என்றும் அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது பற்றி ஞாபகமிருந்தது. எனினும் சிவபதி செய்த தவறுகள் அவ்வாறல்ல எனத் தற்போதைய தகவல்கள் கூறிக்கொண்டிருக்கின்றன. பௌத்தர்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பது அவனது பொழுது போக்காக இருந்தது. நாட்டு மக்கள் அதற்காகவே எதிர்த்துள்ளனர். மக்களுக்காகவும், நியாயத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்த எல்லாளனுக்கு தனது மகனைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டதற்குக் காரணம் அதன் பின்னணியாகும். தனது மகனைக் கொலை செய்ததால் உண்மையிலேயே அவன் வேதனை யடைந்தான் என்பது இப்பொழுது தெளிவாகின்றது. அரச நிர்வாகம் தாம் நினைக்கும் அளவிற்கு இலகுவான காரியம் அல்லவென்பது காமினிக்கு இப்போது புரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு நாள் அந்திவேளையில் எல்லாளனின் மாளிகையைப் பார்வையிடச் சென்ற விடயம் காமினிக்கு ஞாபகம் வந்தது. மேல்மாடியில் சயன அறையில் ஒரேயொரு குட்டையான கட்டில் மாத்திரம் இருந்தது. அதன் வலப்பக்கத்தில் இருந்த தங்கத்தாலான பேழை பற்றிய ஞாபகம் கவலையை உண்டாக்கியது.



"அரசரே, இத்தங்கப்பேழையில் சிவபதியின் அஸ்தி இருக்கிறது. தன் மகனின் அஸ்தியானாலும் அரச மாளிகையில் வைத்திருப்பது அபசகுனம் என்று பலரும் சொன்னார்கள் என்றாலும் அரசர் காலையும், மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பேழைக்கு முன்னால் உட்கார்ந்து பிரார்த்தனை செய்வார். சில வேளைகளில் சிறுபிள் ளையைப்போல் அழுது புலம்புவார். அன்று இறுதிப் போருக்காக ஆயத்தமான சமயம் இப் பேழையை கட்டிப்பிடித்துக் கொண்டு சில விநாடிகள் பிரார்த்தனை செய்து விட்டு தமிழில் இப்படியும் கூறினார்: "எனது அன்புள்ள மகனே, நாம் பல காலம் பிரிந்திருந்தோம். இனி நாம் ஒன்றுசேரும் காலம் வந்துவிட்டது." இவ்வாறு கூறிய அரசர் மௌனமாக அந்தக் கோவிலுக்குச் சென்றார். அங்கும் பிரார்த் தனை செய்துவிட்டு நெற்றியில் விபூதி பூசிக்கொண்ட பிறகு. யுத்தத்துக்கான அணிகலன்களை அணிந்து கொண்டார்.

இதைக்கேள்வியுற்றதும் தன்னைச் சூழ தீப்பிளம்புகள் எரிகின்ற மாதிரி காமினி உணர்ந்தார். அக்கணமே தன் முன்னால் தோன்றிய உருவம் எல்லாளனதோ காவன்தீச னதோ என்பதை அரசனால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. முதலில் எல்லாளன் என்று நினைத்தாலும் பின்னர் தந்தையுடையதென்பதைக் கண்டு கொண்டார்.

"போரின் கொடுமையைப்பற்றி நான் கூறியும் காமினி நீர் நம்பவில்லை. இப்போதாவது அதனை உணர்வீர்.. நடந்தது நடந்துவிட்டது: இனி வருவதை..." வானத்தில் எங்கோ கேட்ட அந்தக் குரலுடன் தன் தந்தையின் உருவம் மறைந்து விட்டது. அந்தப் பகுதியை அந்தகாரம் சூழ்ந்துகொண்டது. காமினி உரத்த குரலில் சத்தமிட்டார்.

விளக்கைக் கையில் எடுத்த திஸ்ஸதேவ கதவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து கொண்டு வரும்போதும், காமினியின் உடல் வியர்வையால் நனைந்திருந்தது.

"அரசரே! ஏன் சத்தமிடுகிறீர்கள்? தாங்கள் கனநேரமா விழித்திருந்ததை அவதானித்துக் கொண்டிருந்தேன்."

"எனக்குத் தூக்கமில்லை திஸ்ஸ. மனசு சரியே இல்லை. எல்லா இரவையும் இவ்வாறுதான் கழித்துக் கொண்டிருந்தேன். எப்படித்தான் நான் தூங்குவது?"

அடுத்த நாள் பொழுது விடியும் வரை காமினியும், திஸ்ஸதேவனும் சில தினங்களாக தாம் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் புது அனுபவங்களையிட்டு உரையாடினர்.

"எல்லாளன் இறந்தவுடன் எல்லாம் முடிந்ததென்று நினைத்தேன். எனினும் எல்லாளன் அவ்வாறு செய்திடக் கூடிய ஒருவரல்ல. எனது மனதைப் பாதிக்கின்ற மூன்று காரணங்கள் இருக்கின்றன திஸ்ஸ". என்று கூறியவாறு காமினி சிந்தனையில் ஆழ்ந்தார்.

"அவற்றை மறந்துவிட்டு நடக்கப்போவதை சிந்தியுங்கள் மன்னரே". "எல்லாளன் எனது ஈட்டியால் துளைத்த காயத்துடன் மலைபோன்ற யானையின் மேலிருந்து கீழே சாய்ந்தபோது சித்த சுயாதீனத்துடன் இருந்தான். எல்லாளன் சொன்னான்; நான் தமிழரசன் என்பது உண்மை. எனது ராஜ தர்மத்திற்கேற்ப நாட்டு மக்களுக்கு நியாயத்தை நிலைநாட்டவே நான் முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தேன். எனினும் இந்நாடு சிங்கள அரசனொருவனுக்கு உரியதென்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நான் எவ்வளவு தான் நியாயத்தை நிலைநாட்ட முயற்சித்தாலும், தமிழ் மக்களால் சிங்களவர்களுக்கும் புத்த மதத்திற்கும் நிறைய அநியாயங்கள் ஏற்பட்டன. தமிழ் மக்களிடமிருந்து மாத்திரமல்ல, பெரிய பதவிகளும் தானாந்தரங்களும் வகித்த பலரிடமிருந்தும் மக்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டன. அவற்றை நான் அறிந்தேன். அவற்றைச் தடுப்பதற்கு என்னால் முடியவில்லை. எவ்வாறாயினும் இந்த நாட்டில் இன்னொருமுறை தமிழ் சிங்கள யுத்தமொன்று ஏற்படுவதற்கு இடமளிக்காதீர்கள். திரும்பவும் யுத்தமேற்பட்டால் இந்த நாடு பேரிழப்புக்கு ஆளாகிவிடும். இவ்வாறுகூறிய எல்லாளன் என்னை வாழ்த்தினார்." காமினி கடைசி வசனங்களை மிகவும் கவலையுடன் கூறினார்.

"நடந்தவற்றிற்காக கவலையடைவதால் பயனில்லை அரசரே."

"எல்லாளனின் கடைசி வசனங்கள் என்ன தெரியுமா? அவர் என்னிடம் வேண்டிக்கொண்டது, தமிழ் மக்களிடம் பழி வாங்கவோ, அவர்களை இன்னல்படுத்தவோ வேண்டாமென்பது' அதற்கு நான் உறுதியளித்தேன். அவர் மீண்டுமொரு முறை வேண்டிக் கொண்டார், இந்த நாட்டில் தமிழ், சிங்கள யுத்தம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுமாறு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வயதான அரசருக்கு மரியாதையளிக்குமாப் போல அவரது வேண்டுகோளை நிறைவேற்றுவோம். அரசரே."

"அந்த நிலையை ஏற்படுத்த எங்களுக்கு முடியுமா என்பதுதான் கவலையாய் இருக்கிறது. சிலபேர் மிருகங்களை விடக்கேவலமாக நடந்துகொள் கிறார்கள்." காமினி கோபத்தால் மொழிந்தார்.

மறுநாள் சூரியோதயத்துடன் அரச கட்டளை இரண்டுடன் முரசறைவோன் பட்டிதொட்டியெல்லாம் பறை முழங்கினன்.

"சமாதானத்தின் பெயரால் சகல தமிழ் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தமிழர் எவருக்கும் எந்தவித தொந்தரவுகளையோ. அவர்களது உடமை களுக்கும். வீடுகளுக்கும் நட்டத்தையோ ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும்."

"எல்லாள மன்னனின் சிதை மூட்டப்பட்ட இடத்தில் ஏழு நாட்களுக்குள் நினைவுத் தூபி கட்டியெழுப்பப்படும் என்பதையும் யாவரும் கவனத்தில் கொள்ளவேண்டும். காமினி மாமன்னன் உட்பட எதிர்கால மன்னர். மக்கள் அனைவரும் இந்த நினைவுத் தூபிக்கு அருகில் செல்ல நேரிட்டால் தங்கள் வாகனங்களிலிருந்து கீழிறங்கி. இசைக் கருவிகள் இசைப்பதைத்தவிர்த்து மரியாதையுடன் பயணம் செய்யவேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகருக்குள்ளும். கிராமங்கள் தோறும் இந்த அரச ஆணை பிறப்பிக்கப்பட்டதுடன் நாட்டு மக்களுக்குள் பலவிதமான உணர்வுகள் மேலிட்டன. சாதாரண ஒரு குடிமகனாயின் விரும்பியோ விரும்பாமலோ ஆணை தனைக் கடைப்பிடிப்பான் எனினும் பிக்குமாரும் பிரபுக்களும் அந்த இரண்டு கட்டளைகளையுமிட்டு அவ்வளவு திருப்தி அடையவில்லை. எல்லாள மன்னன் தோல்வியுறும் வரை இக்கூட்டத்தினர் காத்திருந்ததும், தமிழ் மக்களின் அட்டூழியங்களுக்கு அவர்களிடம் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்குடனேயே. கமுனு மன்னனின் வெற்றியின்பின் சிங்களத்தீவின் சகல உரிமைகளும் சிங்கள பௌத்தர்களுக்கென்ற இறுமாப்பில் உடமைகளைக் கொள்ளையடிக்கவும், அவர்களுக்கு இன்னல் விளைவிக்கவும் ஆரம்பித் தார்கள். அரச நியதியல்லாத போதும் இதுவரை தமிழர்களின் தொல்லைகளுக்காளாயிருந்த சிங்கள மக்கள் அவர்களிடம் பழிவாங்க முற்பட்டனர். உடமைகளைக் கொள்ளையடித்தனர். விகாரைகளைக் கொள்ளையடித்த தமிழர்களிடம் வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற தீராத ஆத்திரத்திலிருந்த சில பிக்குமாரும் முன்னணி வகித்தனர்: அல்லது தங்கள் ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தினர். இச்செயல் களுக்கு இடைஞ்சலான அரச கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் அவர்களது அதிருப்திக்குக் காரணமாக அமையும் என்பது புதினமல்ல.

சிங்கள அரசருக்கு ஆட்சி கிடைக்க வேண்டுமென்று நாற்பதாண்டுகாலமாக பொறுத்தி ருந்தோம். இப்போது எங்கள் அரசர் நியாயம் பற்றி தேவாரம் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

இப்படியே சென்றால் தமிழ் அதிகாரம் மேலெழும்: அதற்கு இடமளிக்க முடியாது. இது எங்கள் இராஜாங்கம். தமிழன் ஒவ்வொருத்தனையும் வெட்டிக் கிழித்து சோழ நாட்டுக்கு விரட்டியடிக்கவல்லவோ வேண்டும்...

சிலர் வாதிட்டனர்.


"சரி. அது அப்படியென்று சொல்லுவோம். போதாக் குறைக்கு எல்லாளனுக்காக நினைவுத் தூபியொன்று மல்லவா கட்டியெழுப்பப் போகிறார்கள். இந்த இடத்தால் பயணம் செய்கின்றபோது கும்பிட்டுக் கொண்டல்லவா செல்ல வேண்டியிருக்கும் மக்களால் அரசருக்கு நினைவாலயம் கட்டியெழுப்பத்தான் புத்தரும் அனுமதியளித்துள்ளார். என்றாலும் எல்லாள சோழனுக்கு மாமன்னனை விட் மேலாக மரியாதை செலுத்த வேண்டியிருக்கிறதே. எங்கள் மன்னருக்கு பைத்தியம் பிடித்து விட்டதா..." சில பிக்குமார் இவ்வாறும் கதைத்தனர்.

நேற்றைய நடுச்சாமத்தில் ஒலித்த மணியோசையால் காமினி திடுக்கிட்டு எழுந்து கொண்டார். அதனால் கலவரமடைந்த அரசர் சயனத்தில் அமர்ந்தவாறே ஓசையெழுந்த திசைக்கு காது கொடுத்தார். அவ்வொலி கேட்ட திஸ்ஸ தேவனும் அவ்விடத்துக்கு வந்ததால் கொஞ்சம் ஆறுதலடைந்தார். "இந்த நேரத்தில் மணியோசை?" "நானும் அவ்வொலி கேட்டுத்தான் தங்களிடம் வந்தேன். இந்த ஒலி எல்லாள மன்னனின் தர்ம மணியோசையாகத்தான் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் கஷ்டமேற்பட்டிருக்கும்." திஸ்ஸ தேவன் விளக்கமளித்தார்.



அரசரும். திஸ்ஸதேவனும் மணியிருந்த இடமேகினர். அப்போதும் காவலாளிகளால் சூழப்பட்டிந்த கிழவி யொருத்தி ஒப்பாரி வைத்த வண்ணமிருந்தாள். ராஜபுருஷர் களின் பிடியிலிருந்து மீளுவதற்கு அவள் முயற்சிசெய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

இன்னுமின்னும் உரக்கக் கத்தினாள். அவளது முடிஅவிழ்ந்து தலைவிரிகோலமாக இருந்தாள்.

"அப்பெண்ணை தொந்தரவு செய்யாதீர்கள்; இங்கு அழைத்து வரவும்." திஸ்ஸ தேவனின் கட்டளைப்படி அவளை அரசரிடம் ஒப்படைத்தார்கள்.

"ஏன்... இந்த நடுராத்திரி...?" "புண்ணியம் செய்த பிரபுவே." என்று கூறியவாறே அரசர் முன் சிரம் தாழ்த்திக் கும்பிட்டாள். அவளது பேச்சின் சாயலில் அவள் தமிழ்ப்பெண் என்பது தெளிவு. வேர்க்க விறுவிறுக்க, இளைத்தவளாக தனது சோகக்கதையை அரசரின் முன்வைத்தாள்.

"எமது வீடு அபய வாவிக்கு அருகில் அமைந்துள்ளது. எனது கணவர் முருகேசு யுத்த சேனைக்கு சென்றார்.... விருப்பத்தோடல்ல, ராஜகட்ட ளையை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக... யுத்தத்தின் பின் நேற்றிரவு உயிருடன் வீடு வந்து சேர்ந்தார். கொஞ்ச நேரத்துக்குள் பல பேர் வந்து அவரைக் வீட்டுக்கு வெளியே இழுத்தெடுத்து நையப்புடைத்து அவரை கொன்று விட்டார்கள். அய்யோ சாமி... எங்கள் வீடும் நாசமாய்ப்போச்சு... நாங்கள் சிங்களவர்களுக்கு விரோதிகள் அல்ல. எனது மகளின் புருஷனும் சிங்களவர்... எங்களுக்கு சிங்களமும் சரி... தமிழும் சரி... ஐயோ கடவுளே... இந்த நாட்டை விட்டு நாம் எங்குதான் செல்வது..." அரசன் முன்னால் நிலத்தில் உருண்டு புரண்டு அப்பெண் அரசரின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விபரங்களைத் தெரிந்துகொண்ட அரசர், அப்பெண்ணை ஆறுதல் படுத்தியதுடன் மரணச் சடங்குகளை முடித்துவிட்டு அவளுக்கு வீடொன்றினைக் கட்டிக் கொடுப்பதற்கும், ஒவ்வொரு போயா தினத்திலும் பணம் செலுத்துவதற்கும் பணிக்கப்பட்டது. அவ்வாறே குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கவும் அரசர் தீர்மானித்தார்.

இவ்வாறு மனக்குழப்பத்தில் காமினி இருந்த சமயத்தில் பள்ளுக என்ற சேனாதிபதி தனது படையுடன் சோழ நாட்டிலிருந்து வந்து மாவட்டு தொட்ட என்ற இடத்தில் முகாமிட்டுள்ளதாகக் தகவல் கிடைத்தது. இவர்களின் வருகையைக் கேள்வியுற்ற சிங்களச் சேனாதிபதிகள் கலவரமடைந்தாலும், அரசர் உதாசீன மாயிருந்தார். சேனைத் தளபதிகள் தத்தமது படைகளை உஷார் நிலையில் வைத்துவிட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச ரோடு கலந்தாலோசனை செய்வதற்காக அரசரிடம் வந்தார்கள்.

"அவ்வாறாயின் இன்னுமொரு முறை மனிதக் கொலைக்குத் தயார்..?" "மனிதக் கொலையல்ல அரசே, எமது நாட்டைக் காப்பதற்கு நாம் கடமைப் பட்டுள்ளோம்." புஸ்ஸதேவ கூறினான். "அது உங்கள் விருப்பம்". சிறு வயது முதல் யுத்தப் பயிற்சி பெற்ற, யுத்தத்தை விரும்பிய காமினி வேற்று நாட்டுப்படை ஆக்கிரமிப்புச் செய்யப் போகும் தறுவாயிலும் அக்கறையின்றி இருப்பது கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தனர். நாட்டை காப்பதற்காக யுத்தம் புரிவதைக் அரசர் எதிர்க்கமாட்டார் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையில். படைத் தளபதிகளில் புஸ்ஸதேவ என்ற தளபதி முன்வந்து அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பள்ளுக என்ற தளபதி ஈட்டி துளைத்து கீழே சாய்ந்தான். சோழப்படை பாரிய அளவில் அழிவிற்குட்பட்டது. ஏனையோர் உயிராபத்திலிருந்து தப்புவதற்காக பின்னடைந்து சென்றனர். வெற்றியடைந்த தளபதி புஸ்ஸதேவ அரசரிடம் இத்தகவலைக் கூறியவுடன் அரசர் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. அதன்பிறகு அடிக்கடி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டங்களின் போதும் காமினி உதாசீனப் போக்கையே கொண்டிருந்தார். இதே நேரம் சத்தாதீசன் குமாரனும் மாகமவிலிருந்து அனுராதபுரம் வந்து ஆட்சிப் பொறுப்பில் ஒரு பகுதியை நிர்வாகம் செய்ததால் நாளாந்த கடமைகள் வழக்கம்போல நடைபெற்றன. கமுனு மன்னன் தொடர்பான உண்மையான விபரங்களை திஸ்ஸதேவ மாத்திரமே அறிந்திருந்தார். அரசருக்கும் தனக்குமிடையிலான இரகசியங்களைப் பாதுகாக்கும் கடமை திஸ்ஸதேவவுக்கு இருந்தது.

எல்லாளனின் இறுதிச் சடங்கு நடைபெற்ற வேளையிலிருந்து கமுனு மன்னன் மிகவும் கவலையுடன் இருந்தார். அரசர் ஓர் இரவைக்கூட சுகமாகக் கழிக்கவில்லை என்பதை அவன் மாத்திரம் அறிந்திருந்தான். தூக்கமின்றி காலம் கழிக்கும் மன்னருடன் இரவின் அதிக நேரத்தைக் கழிப்பதற்கு திஸ்ஸதேவ எண்ணியிருந்தான். அது தனது கடமையென்பதையும் அவன் உணர்ந்தான். யுத்தத்தின் அகோரம் பற்றி காமினி அடிக்கடி கூறுவார். யுத்த களத்தின் மரண ஓலத்தை அடிக்கடி ஞாபகமூட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த போராளிகளின் துணைவியரை. அவர்களது குழந்தைகளைப் பற்றிக் கதைப்பார். அதேபோல எல்லாளனையும். அவனது மகன் சிவபதியையும் மனதால் மறந்த பொழுதைக் காண முடியாமலிருந்தது.

"திஸ்ஸ ! இந்த உலகில் எந்த அநியாயமும் யுத்தக் கொடுமைக்கு நிகரானதல்ல. யுத்தத்திற்கு ஆணிவேர் அதிகார மோகம்: சிங்கள இனத்தையும். புத்த மதத்தையும் காப்பதற்காகவென்று சுலோகம் ஏந்தி யுத்தம் புரிந்தது உண்மை: மேலும் உண்மையைச் சொல்வதாயின் முச்சிங்களப் பகுதிகளையும் ஆளும் வரம் வேண்டுமென்ற ஆசையும் எனக்கிருந்தது. அதிகார மோகத்துக்கு நியாயம். அநியாயம். பாவம். புண்ணியம் பற்றியெல்லாம் சிந்திக்க அவகாசமில்லை என்பது இப்போது புரிகின்றது. அமைதிகாக்கும் வேளையில் மனிதரைக் கொலை செய்வது அநியாயம். யுத்தத்தின் போது மனிதனைக் கொலை செய்வது வீரம். இவை இப்போது ஞாபகம் வருகிறது. விஜிதபுரம் தீப்பற்றியெரிந்தபோது அங்கு சிறைப்பட்டிருந்த மக்களின் மரண ஓலம் இப்போதும் என் செவிகளைத் துளைக்கின்றது. கூரிய வாள் கொண்டு குத்துவது போல." சற்றுநேரம் அமைதியாக திஸ்ஸ ..வனின் முகத்தை உற்று நோக்கிய அரசர் ஒரேயடியாக ..ரங்களை உயர்த்தியவாறு சத்தமிட்டார். "என் இரண்டு கரங்களால் எத்தனை உயிர்களை அழித்திருப்பேன். இந்த அநியாயத்திற்கு எப்படிப் பிராயச் சித்தம் தேடுவது திஸ்ஸ?" காமினி இந்த கடைசி வசனங்களை மிகவும் கவலைதோய்ந்த குரலில் உரைத்தான். அரசன் அரச போகம் வேண்டும் என்ற நோக்கத்தில் அல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்,
விசேட சேர்க்கைப் பகுதி

நாட்டையும் மக்களை யும் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்திலேயே இச்சமரில் ஈடுபட்டார் என்பது திஸ்ஸ தேவனுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. எனினும் இச் சிறுபிள்ளைத்தனமான வாதத்தை அரசர் ஏற்பாரா என்பது சந்தேகம்.

"கடந்த கால சம்பவங்களை எண்ணிக் கவலை கொள்ள வேண்டாம் மன்னவா! இனி நடக்கப் போவதைப் பற்றிச் சிந்தியுங்கள். அதுதான் புத்தியுள்ள செயல்." இவ்வார்த்தைகளாலும் காமினி ஆறுதல் அடைகின்ற மாதிரி இல்லை. இந்நிலையை விஹார மஹா தேவியிடம் கூறினால் பயன் கிடைக்குமா? மதிப்புக்குரிய பிக்குமாரிடம் தெரிவிக்கலாமா? அவர் கள் யாராக இருந்தாலும் மன்னர் எதிர்பார்க்கின்ற ஆறுதல் கிடைக்கப்போவதில்லையென திஸ்ஸதேவ அறிந்திருந்தான்.

விஜிதபுர யுத்தத்தின் பின்னர் காமினிக்கும். தெரபுத்தபயனுக்கும் இடையில் அடிக்கடி இரகசிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதும், அரசர் அதில் விசேட பற்று வைத்திருந்தார் என்பதும் திஸ்ஸ தேவனுக்கு ஞாபகம் வந்தது. சமர் முடிந்த பின்னர் தன் கடமையிலிருந்து விடுபட்டு சற்று ஓய்வாய் இருந்தான் தெரபுத்தபயன். தெரபுத்தபயனின் நட்பால் மன்னன் ஆறுதல் கொள்வார் என்ற காரணத்தினால் அவனை அழைத்தான்.

இரண்டு வாரங்களின் பின் காமினியைக் கண்ட தெரபுத்தபயன் அசையாது திகைத்துப்போய் கண் கொட்டாது பார்த்திருந்தான். அந்த அளவுக்கு மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத்துப்போயிருந்தார். கண்களைச் சுற்றி கறுப்புப்படலம் படர்ந்திருந்த முகம்களைப்படைந்து காணப்பட்டது.

தங்களது சுக செய்திகள் எப்படி? இப்போது ஓய்வாக இருக்க வேண்டிய காலமல்லவா ? பல ஆண்டுகளாக யுத்தத்தில் கஷ்டம் அனுபவித்தோம்: சாடையாக வாயைத்திறந்த மன்னர் மெல்லிய சிரிப்பொன்றைப் படரவிட்டவாறு நீண்ட பெருமூச் சொன்றை வெளியிட்டார். ஓய்வையும் களைப்பையும் அறியாதவனைப்போல யுத்த களத்தில் சகலரையும் உற்சாகப்படுத்தி அன்பு வார்த்தை களைக் கூறிய கமுனுகுமாரன் இப்போது இருக்கும் உதாசீன நிலையை தெரபுத் தாபயனால் நம்பமுடியவில்லை. எனினும் அவரது உள்ளத்தைப் புரிந்திருந்த தெரபுத்தாபயனுக்கு அவரது தற்போதைய நிலைமைக்கு காரணம் என்ன வென்பதை புரிந்துக்கொள்ள முடிந்தது. நான் இப்போது கொஞ்சம் ஓய்வாக இருக்கிறேன். பகல் பொழுதில் நீண்ட நேரத்தை மிகிந்தலையில் கழிக்கின்றேன். அங்கு சுகமாக இருக்கிறது குமாரரே.

மிகிந்தலையில்: ? ஏன் தவம் இருக்கிறீரா. முனிவராகும் எண்ணமா?

எனக்கு அப்படி ஓர் எண்ணமும் இருக்கிறது. எனது கடமை முடிந்துவிட்டதல்லவா?

உமது கடமை முடிந்து விட்டது. எனக்கும் அவ்வாறு ஆறுதல் அடைய முடியுமென்றால் எவ்வளவு அதிர்ஷ்ட சாலியாக இருப்பேன் அபய? அரசன் அவற்றை மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துடன் கூறினான்.

"ஏதாவது ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் அதனை நிறைவேற்றும் வரை தைரியமாக செயல் படுவதே வீரச் சிங்களவரின் இயல்பென்று தாங்க ளல்லவா எமக்கு அன்று அறிவுரை கூறினீர்கள். ஆம் .... சரி ... நாம் அக்கடமையை நிறைவேற்றியுள்ளோம்" காமினி இவ்வாறு கூறியதற்கு காரணம் தெரபு த்தாபயனதுகருத்தை எதிர்பார்த்தது போல்.

எனது கடமை முடிந்து விட்டது எனினும்...... எனினும்.. தங்களது கடமை முடிந்து விடவில்லை. இது ஆரம்பம் மாத்திரமே. தெரபு த்தபயன் அவ்வாறு கூறிவிட்டு அரசரை நோக்கினான். அவ்வாறு மன்னன் கூறுவது சரியா என வினவுவது போல .

நானும் எமது அரசருக்கு இதைத்தான் ஞாபகப் படுத்திக்கொண்டு இருக்கிறேன். அபயநாட்டு மக்கள் குமாரரிடம் வைத்துள்ள நம்பிக்கையை துகளாக்கி விட இயலாது' திஸ்ஸதேவன் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கதை பகர்ந்தான்.

"அது சரி! எனினும் நல்லது கெட்டது என்பதை தீர்மானிக்கும் சக்தி எல்லோருக்கும் உண்டல்லவா. மனச்சாட்சிப்படி செயல்படும் ஆசை. எனது மனச் சாட்சிப்படி செயல்படுவதாயின் ஒரு காலமும் இந்த இராஜாங்கத்தை ஆள முடியாது' காமினி கோபத் துடன் கதைத்தார். அதன் பிறகு சில வினாடிகள் மௌனம் நிலவியது. அபய வாவிப்பக்கமாக நாய்களின் ஓசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரிகளின் கூக்குரலும் போட்டி போட்டுக் கொண்டு ஒலித்தன.

"இந்த ஒலி கேட்டவுடன் எனது இதயம் கழன்று விடுவது போல் இருந்தது" காமினி கூறினார். யுத்தத்தின் போது கீழே சாய்ந்தவர்களின் சதைப் பிண்டங்களை கடித்துக் குதறி சந்தோசத்தில் இருக்கின்ற நாய்களின் ஒலிதான் அது என்பதை காமினியைப் போலவே தெரபுத்தாபயனும் அறிந்திருந்தான்.

"தாங்கள் உதாசீனம் அடைந்தால் மீண்டும் ஒரு முறை தமிழ் அரசன் ஒருவனுக்கு நாட்டை ஒப்படைக்க வேண்டிவரும்." தெரபுத்தாபயன் ஆணித்தரமாக கூறினான். எல்லாளன் நேர்மையான வழியில் நாட்டை ஆள முயன்றும் ராஜ புருஷர்களதும் இன்னும் பலரதும் தொல்லைகளுக்கு மக்கள் ஆளானார்கள். தமிழ் மக்கள் நாட்டுமக்களை அல்லல் படுத்தினார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆச்சரியம் என்ன வென்றால் சிங்கள அதிகார வர்க்கமும் அதற்கு சளைத்தவர்கள் அல்லர் என்பது தான்.

ஆம். அது எனக்குத் தெரியும்! எல்லாள மன்னனின் மரணச் சடங்கின் பின்னர் ஒரு நாள் தான் மிகிந்தலைக்கு சென்ற சமயம் இரண்டு காதவழி தள்ளி அமைந்திருந்த சிறைச்சாலையைப் பார்க்கச் சென்றதாகவும் அங்கு தமிழ், சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற இன்னல்களையும் தெரபுத்தாபயன் விபரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பூமியில் உள்ள நரகம்: மனிதர்களின் உடம்பு, உயிர் உள்ளபோதே எலும்புக்கூடுகளாகக் காட்சி யளிக்கின்றது! சிலர் எழும்பத் திராணியற்றவர்களாக நிலத்தில் படுக்கையில் முனங்கிக்கொண்டு இருக் கிறார்கள். காலையில் கஞ்சித் தண்ணீயும் அந்த கஞ்சிவடித்த சோற்றுச் சாதமும் தான் உணவாக கொடுக்கிறார்கள்: இரவில், ஏதும் ஒரு பானம்.

வயதான எல்லாளனின் பலவீனமான நிருவாகத் தினை பயன்படுத்தி இராஜபுருசர்களும், பிரபுக்களும் தவற ான வழிகளில் பிரயோசனம் அடைந்தமையும் அவர்களது கோபத்துக்காளான நாட்டு மக்கள் எந்த வித விசாரணைகளும் இன்றி சிறையில் அடைக்கப்பட்ட விதம் பற்றியும் தெரபுத்தாபயன் விளக்கிக் கூறினான். மக்கள் எமக்கு ஆதரவு காட்டுவதற்கு இக்காரணங்கள் ஏதுவாயின. இது எமக்கு அனுகூலமாயிற்று.

எல்லாள மன்னன் இவற்றை அறிந்திருக்க வில்லையா? அவருக்கு தெரியாமலிருக்கும். தெரிந்தி ருந்தாலும் செய்வதற்கு ஒன்றுமில்லை. அக்காலத்தில் இராச புருஷர்களின் ஆட்சியில் இருந்த மாதிரி தெரிகிறது.

நான் நாளையே சிறைமுகாம்களை பார்வையிட வேண்டும். கமுனு மன்னர் கோபத்தில் குதித்தார்.

இவ்விடயங்களை கவனிக்கும் போது எமது யுத்தம் நியாயமானது அரசே! ஏன், எமது பௌத்த தலங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கொள்ளையடித்து சேதமாக்கியது? திஸ்ஸதேவ ஞாபகப்படுத்தினான்.

அதை எல்லாம் இப்போது ஞாபகப்படுத்தி பிரயோசனமில்லை.

திஸ்ஸதேவ: "மிகிந்தலைப் பகுதி சாந்தமான சூழலைக்கொண்ட பிரதேசம் அரசே.

மனதுக்கு அதிசய ஆறுதலளிக்கின்றது. தங்கள் மனத்தையும் ஒரு நிலைப்படுத்திக் கொள்ள மிகிந் தலை பக்கம் போய்வந்தால் நல்லாயிருக்கும்." தெரபுத்தாபயன் கதையை திசைதிருப்ப முயன்றான். அரசரின் கோபத்தை தணியவைக்க வேண்டும் என்பதே அவனின் நோக்கமாக இருந்தது.

"ஆம். நாளைப்பொழுது விடிவதற்குள் மிகிந்தலைக்குச் செல்வோம்."

மிகிந்தலைப் பிரயாணத்தின் இரண்டாவது நாளின் அந்திப்பொழுதில் தூபாராமையின் ஏழு சந்நியாசிகளுடன் நந்திமித்திரவுடன் தளபதிகளும் அரசரை காணச் சென்றனர். கலந்துரையாடலின் பின்னர் தூபாராமையின் தேரர் இப்பிரயாணத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

அரசரே. மும்மணிகளின் ஆசீர்வாதத்துடன் தாங்கள் முச்சிங்கள மக்களை ஒன்றிணைத்து விட்டீர்கள். நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் ஏற்பட்டிருப்பதாக இத்தளபதிகள் கூறுகிறார்கள். இனி தங்களின் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கான காலம் வந்து விட்டது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில், நிறை வேற்றவேண்டிய வழிபாடுகளை ஞாபகப் படுத்துவதற்காகவே நாம் இங்கு வந்தோம்.

தூபாராமையின் சங்கைக்குரிய தேரர் அரசரின் பதிலை எதிர்பார்த்து தன் பேச்சை நிறுத்திக் கொண்டார். எனினும் காமினி ஆர்வமற்றவன்போல மௌனமாகவே இருந்தான்.

நாம் இன்று வந்ததன் நோக்கம் இந்த முக்கியமான சம்பவத்திற்கு நாள்குறிக்கவே. தங்கள் அபிஷேக உற்சவத்திற்கு. இத்தளபதிகள் எங்களுடன் இவ்விடயம் பற்றி கலந்துரையாடினார்கள்.

அடுத்த பௌர்ணமி முடிந்த இரண்டாம் புதன் கிழமைக்கு இராஜயோகம் அமைந்திருக்கிறது. அன்றைய தினத்தில் அபிஷேக உற்சவத்தை வைத்துக்கொண்டால் மிகவும் நல்லாயிருக்கும். அப்படித்தானே: நந்திமித்திர தளபதி அவர்களே!

இந்த யோசனையை நாங்களும் விரும்புகிறோம். குடிமக்களும் அதனையே விரும்பு கிறார்கள் என்றான் நந்திமித்திர.

அரசர் இக்கருத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார் என்றே யாவரும் எதிர்பார்த்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அரசர் அவ்வளவு அக்கறை காட்டியதாக தெரியவில்லை.

எமது அரசரின் கருத்தை தெரிந்து கொண்டால் நல்லது என்றவாறு தேரர் அரசரின் முகத்தை நோக்கினார்.

தங்களுக்கும் எனது அன்புக்குரிய சேனாதிபதிகளுக்கும் அவமரியாதை ஏற்படுத்த நான் விரும்ப வில்லை. எனினும் அபிஷேக உற்சவத்தை கொஞ்சநாளைக்கு தள்ளிப்போட வேண்டும் என்பதே எனது கருத்து.

"தாமதப்படுத்த.........

தாமதப்படுத்த......... துாபாராமை தேரர் அதனை திருப்பிச் சொல்லலானார். அரசரின் பேச்சினால் ஆச்சரியம் அடைந்த சேனாதிபதிகள் முகங்களைப் பார்த்துக் கொண்டனர்.

ஆமாம் அரசரே! யுத்தத்தினால் ஏற்பட்ட மனித அழிவுகளை ஞாபகப்படுத்தும் போது எனக்கும் நிம்மதி இல்லை. விஜித்த புரம், கிரிலக, கஹகலுகம சமர்களின்போது பச்சை பச்சையாய் மனித உயிர்கள் தீக்கிரையாயின. அவர்களது மரண ஓலங்களினால் எனது செவிகள் அடைத்துவிட்டன. இன்னும் அவர்கள் கூக்குரல் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. எங்களால் பெரிய அநியாயம் இழைக்கப்பட்டுள்ளது. உயிர்பலியின் பாரதுாரம் இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகின்றது. அந்த பிணவாடை. இரத்தவாடை இப்போதும் நாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி


அடிக்கின்றது. அவற்றை மறந்து எப்படி அபிஷேகம் நடத்துவது? காமினி ஒரு கணம் கோபத்துடனும், மறுகணம் பச்சாதாபப்பட்டும் கதைத்தார். அதன் பிறகு சிலவிநாடிகள் மௌனம் அப்பகுதியை ஆட்கொண்டது. அதன்பின்னர் அத்தேரரோ தனது குரலை ஒருமுறை இருமி சரிசெய்து கொண்டார். இது பலரது கவனத்தையும் தன்பால் ஈர்ப்பதற்கான உபாயமாகும்.

"பேரரசரே, அது பற்றி நினைத்துக் கவலைப்படக் காரணமில்லை. தாங்கள் மாகமையிலிருந்து மத குருமாரின் ஆசீர்வாதத்துடன் யுத்தம் புரிந்தமை, தனிப்பட்ட முறையில் செல்வத்தை அநுபவிக்கவல்ல. இவ்விலங்கைத்தீவையும், சிங்கள இனத்தையும், எமது புத்தமதத்தையும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டுமென்ற தூய எண்ணத்துடனேயே: தேரர் தன்பேச்சை இடைநிறுத்தி விட்டு ஒவ்வொரு சேனாதிபதியினதும் முகத்தைப் பார்த்ததன் நோக்கம் அவர்களது கருத்துக்களையும் ஒன்று சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே.

"அடுத்த விடயம் தேரர்களே! எமது வெற்றியைப் பற்றி நினைக்கும்போது அனுராதபுரத்தை வெற்றியீட்டியது தந்திரத்தனமான முறையிலாகும். முப்பத்திரண்டு போர் முனைகளிலும் எனது உருவத் தைப் போன்று செய்து அதனை யானைமேல் இருத்திக் கொண்டுபோனபடியால் இலகுவில் வெற்றி கண்டோம். அது சரியான ஏமாற்றுவேலை என்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். எனவே தன்மானத்துடன் எவ்வாறு அபிஷேக கொண்டாட்டம் நடத்துவது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அது யுத்த தந்திரம் அரசே! யுத்தகளத்தில் எந்நேரமும் நேர்மையுடன் நடக்க முடியாதென்பதை என்னைவிடத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அது வெட்கப்படவேண்டிய விடயமல்ல. அடுத்தவிடயம் இது பற்றி மக்களுக்குத் தெரியாது". தேரர் வாதாடினார்.

"எல்லாளன் நேர்மையான அரசன்; நம் கையால் பெரிய குற்றமிழைக்கப்பட்டுள்ளது."

அது பற்றி கதைப்பதால் பிரயோசனமில்லை மன்னரே. யாவரும் தெரிந்திருக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் இருக்கின்றது. இந்த யுத்தத் தைப் பற்றி எமது புத்த பிக்குகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். எமது அறிவுக் கெட்டிய வகையிலும் அதேபோல இந்த சேனாதிபதிகள் கருத்துப்படியும் சிங்கள சேனைகளால் அழிக்கப் பட்டவர்கள் மூடநம்பிக்கை கொண்ட கூட்ட மொன்றினையே. நாசகார சோழர்கள் மிருகங் களுக்குச் சமமானவர்கள். அதனால் கவலைப்பட வேண்டிய காரணமெதுவுமில்லை மன்னரே".

மஹா சங்கத்தினர் இவ்வாறு கூறுகையில் கமுனு மன்னனின் கை. கால்களுக்கு ஏற்பட்ட வேதனையைப் பொறுக்க முடியாமல் ஆசனத்திலிருந்து எழுந்து நின்றார். அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த திஸ்ஸதேவ தம் பக்கத்திலிருந்த சிநேகிதனின் முகத்தைப் பார்த்தவிதம் தேரர்களின் மனம் நோகும்படி எதையும் கதைக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுப்பது போலிருந்தது. அவனின் சைகையை உணர்ந்த அரசர் மௌனமாக ஆசனத்தில் அமர்ந்தார்.

"அரசரே! அடுத்த விடயம். நாம் நமக்குத் தெரிந்த வரையில் உண்மையைச் சொல்வதாயிருந்தால் அவ் யுத்தத்தில் ஈடுபட்ட சோழர்களில் பஞ்சசீலத்தைக் கடைப்பிடித்த ஒருவரும் தர்மத்தில் ஈடுபட்ட ஒருவரும் மாத்திரம் இருந்ததாக அறிகிறோம். இவ்விடயங்கள் உண்மையெனில் மனித உயிர்கள் எனக்கூறக் கூடியவர்கள் ஒன்றரைப் பேரே மாண்டுள்ளனர். ஏனைய அனைவரும் மிருகங்களை ஒத்தவர்கள். எனவே இவ் யுத்தத்தில் எமது மன்னர் எண்ணுகிறவாறு அவ்வளவு அநியாயம் ஒன்றும் நடக்கவில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்துக்கேற்றவாறு அரசரைத் தேற்றுவதற்கு தகுந்த முறியடிக்க முடியாத காரணமொன்றைக் கூறி யதாக நினைத்த பிக்கு, தன் ஞானம் எப்பேற்பட்டதென தனக்குள் புகழ்ந்தவாறே சத்தமிட்டுச் சிரித்தார்.

காமினி இரண்டு காதுத் துவாரங்களையும் விரல்களால் அடைத்து மூடிக்கொண்டார். சிறுவயதிலிருந்தே பௌத்த பிக்குமாருக்கு மரியாதை கொடுத்துப் பழக்கப்பட்டவர் என்கின்றபடியால், மனதில் எழுந்த கோபத்தை அடக்குவ தற்காகக் காதுகளைப் பொத்தியவாறே செய்வதறியாது பார்த்துக்கொண்டிருந்தார். சில கணங்கள் அதே நிலையிலிருந்த அரசர் தேரரின் பாதங்களை நோக்கி வணங்கியமை அவ்விடத்தை விட்டுச் செல்ல அனுமதி கேட்பது போலிருந்தது.

"சரி, மன்னர் இதை மேலும் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. சுப முகூர்த்தத்துக்கு இன்னும் காலமுண் டல்லவா".

சகலரும் சென்ற பின்னர் காமினி மிக வேகமாக அடியெடுத்து வைத்து அங்குமிங்கும் உலாவத் துவங்கினார். திடீரென ஏதோ முக்கிய விடயம் ஞாபகத்துக்கு வந்தது போல திஸ்ஸதேவனின் முகத்தை நோக்கினார்.

"தெரபுத்தாபயன் எங்கே? அவர் இந்த சூழ்ச்சிகளில் பங்குகொள்ளவில்லை போலும்".

"ஏன் தங்களுக்கு அறிவிக்கவில்லையா? அபய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிபதி துறவறம் பூண்டு ஆரணியமடையத் தயாராகிறாராம்."

கணநேரத்துக்குப்பின்னர் அரசரின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

"துறவுபூண்டு ஆரணியமடைய? அபயவும் உண்மையைப் புரிந்துகொண்டிருப்பார்: உண்மை யையும். பொய்யையும் உணர்ந்துகொண்ட ஒரே ஆள் அபயபோலும். அவருடன் கதைத்தால் மாத்திரம்தான் நிம்மதி கிடைக்கும். அபயவை அழைத்து வாருங்கள் திஸ்ஸ".

இளமதியின் குளிர்ச்சியில் சிரிமாபோமலுவை தோய்ந்து கிடந்தது. அந்த ஒளியின் பிம்பம் முகத்திலும் இருந்தது. நீண்ட காலத்துக்குப்பின் அவரது முகம் நிம்மதியில் திளைத்திருந்தது. மேற்குத் திசையில் நெற்கதிர்கள் தென்றலிலாடும் போது ஏற்படுகின்ற ஓசை செவிகளுக்கு இனிய நாதமாகவிருந்தது. நீண்ட நாட்களாக அரசரிடம் குடிகொண்டிருந்த கவலையால் துன்புற்ற அரசருக்கு அச்சூழ்நிலையில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அரசருடன் அவரது மனதுக்குப் பிடித்த இருவர் பக்கத்திலிருந்தபடியால் இன்னும் நிம்மதியாக இருந்தது.

யுத்த முனையிலிருக்கும்போது பாராங்கல்லைக் கூட உருட்டிவிடக்கூடிய சக்தி கொண்டிருந்த சேனாதிபதி அபயன் இப்போது எல்லா விடயங் களையும் நடுநிலையாய் அலசிப்பார்த்து காரிய மாற்றுவதை நினைக்கும்போது அரசருக்கு அளவிலா மகிழ்ச்சியாயிருந்தது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தகளத்தில் தனக்கு பக்கசார்பாக இருந்ததைவிட மேலானதென எண்ண லானார்.

"அன்று தந்தையார் தங்களுக்கு ஆற்றினைக் கடந்து செல்லவேண்டாமென்று எச்சரிக்கை செய்தது பயத்தினால் அல்ல. தமிழருடன் யுத்தம் புரிவதால் ஏற்படப்போகின்ற அழிவையும் உயிர்ச் சேதத்தையும் அவர் நன்கு அறிந்தபடியால் அவர் எல்லாம் தெரிந்து வைத்திருந்தார். அரசர் அடிக்கடி கூறிய கதை எனக்கு ஞாபகம் வருகின்றது.

"தந்தையார் என்ன சொன்னார்?"

"யுத்தத்தில் வெற்றி பெறுவது ஓர் அரசன் மாத்திரம் தான். இரு தரப்பு சிப்பாய்களும் தோல்வியைத் தழுவுகின்றனர். சிப்பாய்கள் என்பவர் புது இனமல்ல. மக்களுக்கு தோல்வியையு ம் அழிவையு ம் ஈட்டித் தந்து. ஓர் அரசன் மாத்திரம் யுத்தத்தில் வெற்றி பெறுவது மடத்தனம். அவரது வார்த்தைகள் உண்மையானவை." தெரபுத்தாபயன் பழைய கதையை எடுத்தியம்பினான்.

"தந்தையின் கதை முழுவதும் உண்மையல்ல. யுத்தத்தால் சகலரும் அடைவது தோல்வியே."

தந்தையின் அறிவுரைகளும். செயல்களும் மிக்க மேன்மையானவை என்பது காமினிக்கு இப்போது தெளிவாகின்றது. எனினும் தெளிவு பிறக்கும்போது சகல இடர்களும் நடந்து முடிந்துவிட்டன. இப்பொழுது அவர் அவற்றை எண்ணி பச்சாதாபப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது தந்தை சேரு. கோம ஆகிய குடியிருப்பு களுக்கு விஜயம் செய்ததற்குக் காரணம் இல்லாம லில்லையென்பது இப்போதுதான் புரிகின்றது. அன்று நான் தந்தையை ஏளனஞ் செய்தேன். அவரது பயத்திற்குப் பரிகாசஞ் செய்தேன். தந்தை எனக்கு துட்டகைமுனு என்று பெயர் சூட்டியது சும்மாவல்ல. ஆனால் உண்மையான துட்ட கைமுனு பெயருக்கு தகுதிபெற்றது அன்றல்ல; தந்தையின் பேச்சை மதிக் காமல் யுத்தத்திலிறங்கிய இனிமேல் எனது பெயர் துட்டகைமுனு என்று வழங்கிவருவதையே விரும்புகிறேன்."

மாறாத திடசங்கற்பத்துடன். கம்பீரமான குரலில் உரைத்த அவரது கூற்று போமலுவையில் பட்டு எதிரொலித்தது. தெரபுத்தாபயவும். திஸ்ஸதேவனும் தமது பார்வைக் கணைகளை பரிமாறிக்கொண்டு மௌன மாகச் செவி மடுத்தனர்.

"நான் சிங்கள இனத்தையும் புத்த மதத்தையும் சோழர்களிடமிருந்து காப்பாற்றியது உண்மை. அதேநேரம் என் மனதைத் தாக்குகின்ற காரணம் ஒன்றும் உண்டு அபய! நான் பௌத்த போதனைக்கும். மானிட வர்க்கத்துக்கும் அநியாயம் செய்துள்ளேன். எவ்வாறு இவற்றுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேடுவது?" காமினி மீண்டும் கோபத்தால் கொதித்தார்.

"தாங்கள் நட்டஈடு செலுத்தத் தேவையில்லை. தாங்கள் மாத்திரம் சகல பிழைகளையும் பொறுப் பேற்பது ஏன்? இந்த நாட்டின் எல்லா பிரசைகளும் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கவேண்டும். எமது மகா சங்கத்தினரும் பதில் கூறவேண்டும். அதற்கும் மேலாக கடமைப் பட்டிருப் பானல்லவா இந்த நாட்டை ஆக்கிரமித்து அதிகாரத்தால் நாட்டை பிடித்த எல்லாளன்? எம்மை எதிர்த்த சோழ மக்கள்". தெரபுத்தாபய அரசரைத் தேற்றுவதற்காக உரைத்தான்.

"ஹா.. ஹா.. எனக்குப் புரிகிறது. அதனால் தான் பிக்கு கூறினார் போலும். நம்மில் மரணித்தவர்களின் தொகை ஒன்றரைப்பேராம். அடுத்தவர்கள் மிருகங்களாம்."

"அவருடைய கதையை அவ்வளவாக எடுக்காதீர்கள் அரசரே. தங்களது மனதைத் தேற்றுவதற்காகக் கூறியிருப்பார்."

காமினி அதனைச் செவிமடுக்காதவர்போல வேறு பக்கம் பார்த்துக் கொண்டார். அவர் மீண்டும் பல விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு கதைத்தார்.

"அபய தவமிருக்கச் செல்லத்தான் எண்ணுகிறீர்கள்?"

"எமது அரசர் கடந்த சில காலமாக ஓய்வே இல்லாம லிருந்தார். கடந்த கால விடயங்களை சிந்தித்தவாறு இருப்பதே வேலையாகப்போய் விட்டது." திஸ்ஸதேவன் விளக்கிக் கூறினான்.

"தாங்கள் அனுமதி வழங்கினால் நான் பிக்குவா வதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தங்களுக்கு அந்த சுதந்திரம் இல்லை. மக்களுக்காக, நாட்டுக்காக, சமயத்திற்காக ஆற்றவேண்டிய சேவைகள் எவ்வளவோ உள்ளன." தெரபுத்தாபயன் தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தான். அரசரைக் கதைக்க விடாது அவன் அவ்வாறு செய்தான். அக்கதைகளுக்கு அரசரின் மறுமொழி எவ்வாறிருக்கும் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

"அதாவது நாட்டுக்காக, சமயத்துக்காக மேலும் உயிர்ப்பலி எடுப்பதா?"

"இல்லை அரசரே, இனி அவ்வாறில்லை... அந்த மாதிரியான உயிர்ப்பலிகளுக்கு இடமளிக்காது காத்துக்கொள்வதே தங்களது கடமை."

இளம் தென்றலின் இதமான சுகம் மனதைத் தொட்டது. வானத்தில் மேகக் கூட்டம் மெல்ல மெல்ல வடதிசையை நோக்கி செல்வதை கராமினி நீண்டநேரம் பார்த்திருந்தார். அரசருக்கு அன்றைய பொழுது இதமாக இருந்தது.

"அரசமரத்தடியின் கீழ் சுகமாயிருக்கிறது. புத்தரும் உண்மையைப் புரிந்து கொண்டது அரச மர நிழலின் இவ்வாறான உதவியால்தானாகும்.

தூரத்திலிருந்து பாய்ந்தோடி வந்த முயல்குட்டி ஒன்று அரசமர நிழலில் பதுங்கிக்கொண்டமை, அங்கு அபயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியது போலிருந்தது. விலங்குகள் கூட அபயம் தேடி அரச மரத்தடியை வந்தடையும் புதுமை.

காமினி மிக்க உற்சாகத்தோடு எழுந்து நின்றார். அவரது முகத்திலுள்ள புன்னகையுடன். சந்திரனின் ஒளியும் சேர்ந்து களைகட்டியுள்ளதை தெரபுத்தாபய னும் திஸ்ஸதேவனும் பார்த்து மகிழ்ந்தனர்.

"எவ்வாறாயினும் மூவரசுகளையும் ஒன்று சேர்த்து விட்டீர்கள்". அக்கதையின் சாயலின்படி அது சாதாரண உரையாக இல்லாது. வினாவொன்றை எழுப்புகின்ற தன்மை காணப்பட்டது. எனவே அதற்குப் பதில் கூற திஸ்ஸதேவன் எண்ணினான்.

"அதில் சந்தேகமில்லை அரசரே"!

"எதிர்காலத்தில் எதிரிகள் ஆக்கிரமிப்புக்கும் இடமில்லை."

"அது நிச்சயம்."

"நல்லது. இந்த இலங்கைத் தீவின் அரசன் என்ற முறையில் இன்னுமொரு யுத்தத்திலீடுபட்டு வெற்றியீட்ட முடிவு செய்துள்ளேன். அதுதான் தர்மயுத்தம்! எனது தர்ம யுத்தத்தில் பல அம்சங்கள் இருக்கின்றன. முதலாவது மக்களை சுபீட்சத்தில் ஆழ்த்த வேண்டும். நாட்டை செழிப் படையச் செய்யவேண்டும். சகல மக்களும் சரிசமமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

வசதிகளையும் பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கு வகைசெய்ய வேண்டும். நான் எதிர்பார்க்கும் பெரு வெற்ற ி இதுதான்.

இத் தர்மத்தீவில் வாழ்கின்ற சகல மக்களும் இன. மத உயர்வு தாழ்வு பேதமின்றி வாழ்வதற்கு உரிமை வழங்கவேண்டும்! அத்தோடு இந்த உறுதியையும் வெற்றியையும் ஞாபகப்படுத்தும் விதத்தில் அரசமரத் துக்கு அப்பால் தெரியும் இடத்தில் தூபி ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் நாட்டு மக்களின் உழைப்பால் அல்ல. தற்போது என்னிடம் உள்ள எல்லாளனின் திறைசேரியில் உள்ள சொத்துக்களால். அதுமாத்திரம் அல்ல. மக்களிடம் ஒற்றுமை. சமாதானம். ஒழுக்கம் போன்ற குணநலன்களை பரப்பவேண்டும். இதற்காக ஊர் ஊராக தர்ம தூதுவர்களை நியமனம் செய்து அனுப்ப வேண்டும். இவ்விலங்கை தீவு நான் எண்ணுகின்றதான தர்மத்தீவாக மாறியபின்னரே எனது தர்ம யுத்தம் நிறைவு பெறும். இக்கணம் தொட்டு எனது தர்மயுத்தம் வெற்றிபெறும் வரை என்னை அர்ப்பணிப்பேன்."

தெரபுத்தாபயனும். திஸ்ஸதேவனும் செய்வதறியாது அரசரின் மாற்றத்தை கண்டு ஆச்சரியமடைந்தனர். காமினி மீண்டும் தணிந்த குரலில் கதைக் கலானார்.

"என்மனம் நிம்மதி அடைகிறது. மாகமையில் யுத்த ஏற்பாடுகளை செய்தபோது இருந்த மனவுறுதியை காண்கின்றேன். திஸ்ஸவின் கருத்தென்ன?."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாங்கள் நூறாண்டு வாழவேண்டும். ஆனால் மகன் குமரன் பெண்களுக்கான அணிகலன்களை அனுப்பினால் அதனை ஏற்று அச் செயலுக்கு பரிசு ஒன்றையும் தயாராக வைத்து இருக்கவேண்டும்." திஸ்ஸ இடத்துக்கேற்ற பகிடியும் விட்டான்.

பிறகு மூவரும் ஒருமித்து சத்தமிட்டுச் சிரித்தமை எல்லா கவலைகளையும் களைந்தது போலிருந்தது.

"நாம் எதிரியைப் போரில் வென்றது" அவர்களை ஏமாற்றியல்ல அரசே. தங்கள் உருவத்தை செய்து முப்பத்திரண்டு முன்னணிகளிலும் யானைமேல் ஏற்றி பவனிவந்தமை ஞாபகம் இருக்கிறதா?"

நினைக்கும்போது சிரிப்பு வருகிறது. தெரபுத் தாபயன் பழம் கதையை ஞாபகமூட்டியது காமினியை தேற்றுவதற்காகும்.

"ஞாபகம்! ஞாபகம்! அது அம்மாவின் தந்திரம் ; அன்றும் அதனை நான் விரும்பவில்லை. ஆனால் இந்த தர்மயுத்தத்தின்போது ஏமாற்று வேலைகளுக்கு இடமில்லை. ஏமாறறுகளால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். எனது தர்ம ஆட்சியில் உண்மை அரசோச்சும், நேர்மை தவழும்.

எனக்கு சூட்டியுள்ள துட்டகைமுனு என்ற பெயர் அதனை எப்போதும் ஞாபக மூட்டும்."

"ஆகட்டும் அரசே.தங்களது தர்ம அரசிற்கு எமது

ஆசீர்வாதம்! அத்தோடு நான் துறவறம் பூண அனுமதி வழங்குங்கள் அரசே!"

"அந்த அனுமதி தங்களுக்கு கிடைக்கின்றது. அபய. ஆனால் எமக்கு தேவைப்படும்போது தங்களது அறிவுரைகள், வழிக்காட்டல்கள் எமக்கு தவறாமல் கிடைக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்துடன்." "மகிழ்ச்சி, மகிழ்ச்சி, ஆனால் உயிர்ப் பலிகளுக்கு எனது உதவி கிடைக்காது."

"ஆம்! இன்றிலிருந்து எனது அரசாட்சியில் மனிதக் கொலைக்கோ துன்புறுத்தலுக்கோ இடமளிக்க மாட்டேன்." துட்டகைமுனு திடமான உறுதியுடன் பதிலளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனுள் ஒரு மனிதன்

-ஏ.வீ சுரவீர-

இலங்கை வரலாற்றின் பிரபல நிகழ்ச்சியொன்றான துட்டகைமுனு-எல்லாளன் யுத்தத்தின் பின்னணியில் அமைந்ததே பேராசிரியர் ஏ.வீ. சுரவீர அவர்கள் எழுதியுள்ள மன்னனுள் ஒரு மனிதன் எனும் சிறுகதையாகும்.

எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்கென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளவற்றை அவ்வாறே ஏற்றுக் கொள்வதைத் தவிர்த்து பரஸ்பர மனிதாபிமான தொடர்புப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கும் தன்மையை உருவாக்குவது இவ்வாறான படைப்புக்களின் நோக்கமாகும். இன்று இந்நாட்டின் சமுகங்கள் முகங்கொடுத்திருக்கும் பல்வித பிரச்சினைகளினதும் உண்மையான நிலையை விளங்கிக் கொள்ள இது ஒரு நல்ல அணுகுமுறையாகும்.

தமிழாக்கம் :

*ஏ. ஸீ. எம். ராஸீக்*
*ஸமீனா ஸஹீட்*

Rs. 75/=

**S. Godage & Brothers**

**675, Maradana Road,**

**Colombo 10.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org